விலை : 20.00 Viber : 076 636 3378

பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 தை 25 செவ்வாய்க்கிழமை (07.02.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 050

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## மோ.சைக்கிள் - டிப்பர் கோர விபத்து; கணவன் பலி; மனைவி படுகாயம்



### திருமணமாகி 9 நாட்களில் நிகழ்ந்த சோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வேலணை பகுதியில் டிப்பர் வாகனமொன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் மோதியதில் சம்பவ இடத்திலேயே கணவர் பரிதாபகரமாக உயிரிழந்ததுடன் மனைவி படுகாயம

23ஆம் பக்கம் பார்க்க....

## எவ்வித பாதுகாப்புமின்றி நரகத்தில் குடியேற்றம்!

### நல்லிணக்கபுர மக்கள் வேதனை

(யாழ்ப்பாணம்)


யாழில் அகதிமுகாம்கள் இல்லையென சர்வதேசத்துக்கு காண்பிப்பதற்காக எம்மை நரகத்தில் கொண்டு வந்து குடியமர்த்தியுள்ளார்கள் என தெரிவித்த நல்லிணக்கபுர மக்கள் மீண்டும் முகாம்களுக்கே தாம் செல்லப்போவதாக மிகவும் வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அப்பகுதி மக்கள் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நாங்கள் கடந்த 1990 ஆண்டில்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஆமை இறைச்சி; ஐவர் கைது



(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி, பள்ளிக்குடா பகுதியில் கட

24ஆம் பக்கம் பார்க்க....

## சசிகலாவுக்கு வந்த சோதனை!



(சென்னை)

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் அவரது

24ஆம் பக்கம் பார்க்க....

## இன்று மாலைக்குள் தீர்வு இல்லையேல்

# உயிரை மாய்த்தேனும் நிலங்களை மீட்போம்!

## கேப்பாப்பிலவு மக்கள் எச்சரிக்கை

(பனிக்கன்குளம்)

இன்று மாலை 6 மணிக்குள் உரிய பதில் கிடைக்காவிட்டால் தமது போராட்ட வடிவம் மாறும் என தெரிவித்துள்ள போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கேப்பாப்பிலவு மக்கள், தம் உயிரை மாய்த்தேனும் சொந்த நிலங்களை மீட்பதற்கான வழியை மேற்கொள்வோம் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (04-ம் பக்.)

## தமிழீழ விடுதலைப் புலிகளால் மகிந்தவுக்கு உயிர் ஆபத்து

### பாதுகாப்பு கோருகிறார் கம்மன்பில

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் நாட்டில் மீண்டும் தலைதூக்குவது நிச்சயமே என்று ஒன்றிணைந்த எதிர்கட்சியின் முக்கிய பங்காளிக் கட்சிகளில் ஒன்றான பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கருத்து வெளியிட்டுள்ளார்.

இதனால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கான பாதுகாப்பை அதிகரிக்கும்படியும் நல்லாட்சி அரசாங்கத்திடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ்மொழிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் தக்க ஏற்பினை வழங்கக் கோரியே "எழுக தமிழ்"

### வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் அறிக்கை



(யாழ்ப்பாணம்)

தமிழ் மொழிக்கும் அதைப் பேசும் மக்களுக்கும் தக்க ஏற்பினை வழங்க வேண்டும் என வலியுறுத்தியே எதிர்வரும் 10ஆம் திகதி மட்டக்களப்பில் எழுக தமிழ் பேரணி நிகழ்வு நடைபெறவுள்ளது என வடமாகாண முதலமைச்சரும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் எதிர்வரும்

23ஆம் பக்கம் பார்க்க....

## பஸ் வண்டியுடன் விபத்துக்குள்ளாகி கிணற்றினுள் பாய்ந்தது ஹன்ரர்

### மூவர் படுகாயம்



(கரணவாய்)

தொண்டைமானாறு சந்தியில் பஸ்வண்டியும் ஹன்ரர் வாகனமும்

24ஆம் பக்கம் பார்க்க....

## ரூ.20 இலட்சம் பெறுமதியான வலைகள் அறுப்பு

(கரணவாய்)

இந்திய ரோலர்களின் அத்துமீறலினால் வடமராட்சி கட்டைக்காட்டுப் பகுதியின் கடற்தொழிலாளர்களின் 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான மீன்பிடி வலைகள் அறுக்கப்பட்டதால் மீனவர்கள் பெரும் நஷ்டம் அடைந்திருப்பதாக கட்டைக்காடு சென்.

24ஆம் பக்கம் பார்க்க....

## மோ.சைக்கிள் - பிக்கப் விபத்து; குடும்ப பெண் ஸ்தலத்தில் பலி

### கூடச்சென்ற தாயும் மகனும் படுகாயம்

(மல்லாவி)

வவுனியா ஓமந்தைப் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பன்றிக்கெய்தகுளம் பகுதியில் இடம் பெற்ற பிக்கப் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மூன்று பிள்ளைகளின



24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



# உலகப் பெரு மஞ்சம்

## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில் தைப்பூச மஞ்சத் திருவிழா

## சிறப்புப் பொங்கல், பால்குடப் பவனி

காலம் :
நாளை 09.02.2017 வியாழக்கிழமை

காலை 5.00 மணிக்கு
பூஜை ஆரம்பம்

6.00 மணிக்கு (1008) ஆயிரத்து எட்டு பால்குடப் பவனி
இணுவில் மருதனார்மடம் பல்லப்பர்
வைரவர் ஆலயத்தில் இருந்து ஆரம்பம்.
காலை 8.00 மணிக்கு ஆறுமுகப் பெருமானுக்கு
சங்காபிஷேகமும் அபிஷேகமும் இடம்பெறும்.

- பால், குடம் என்பன ஆலயத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- பால்குடம் எடுக்கவிரும்பும் அடியவர்கள் 08.02.2017 புதன்கிழமைக்கு முன் ஆலயத்தில் வந்து பதிவுகளை மேற்கொள்ளவும்.

காலை 10.00 மணிக்கு 1008 பானைப் பொங்கல் ஆரம்பம் 5 மணிக்கு நிறைவு
பொங்கல் பொருட்கள் அனைத்தும் தேவையானவர்கள் ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நண்பகல் விசேட பூஜை வழிபாடுகளும்
சங்கீத கச்சேரிகள், அன்னதானமும் இடம்பெறும்.

இரவு 7 மணிக்கு உலகப் பெருமஞ்சத்தில் ஆறுமுகப் பெருமான்
வீதி வலம் வருவார். பாரம்பரிய கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

அடியவர்கள் அனைவரும் பால்குடம் எடுத்தும், பொங்கல் படையல் செய்யவும்,
உலகப் பெருமஞ்ச வடம் தொட்டிழுக்கவும் வாரீர்

(C-7478)

குறிப்பு: யாத்திரிகர்களுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

**விக்னா வான் சேவை**
கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் மேற்கு, இணுவில்.
பாடசாலை சேவை
தினசரி யாழ் ⇄ கொழும்பு AC, Non A/C வான்சேவை
அத்துடன் சகல இடங்களுக்குமான வான் சேவை
Vicknah Communication
K.K.S Road, Kondavil west, Inuvil.
H D. Gogulan
T.P:077 728 6096

**katpahan Hardware**
Hardware Items & Building Materials
katpaga Pillaiyar Kovilady, Uduvil East, Chunnakam.
T.P: 077 801 9131


**பருத்தியான்**
திருமண சேவை
K.K.S வீதி இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக

HAPPY BIRTHDAY
17ம் ஆண்டு

# பிறந்ததின நினைவலைகள்



திரு. திருமதி
**அருள்நங்கை சண்முகநாதன்**
அவர்களின் செல்வ மகன்
சிரஞ்சீவி
தெய்வமணம் கமழ்
## சந்துதன்
அவர்கள்



பவனமதில் பதினேழகவை சிறப்புடையது
பாவனத்தில் புன்னகை புகழ் பூத்தது
புவனமதில் உன்வரவு புதுமை தந்தது
பூவனத்தில் புதுத்தாமரை மலர்ந்தது
தங்கமதில் சுடரொளி கண் கவர்ந்தது
தாவனத்தில் உன் அன்பாழுமை உயர்ந்தது
தெய்வதமான சந்துதனே உன் நிதம் என உணர்ந்தும்
உள்ளம் கவலையுடன்
கவன்று சுழன்று துடிக்கின்றதே

*இங்ஙனம்:-*

சோமையா மாமா குடும்பத்தினர்
சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜ குருக்கள்
புவனேஸ்வரியம்மா (நெல்லண்டை ஆதீன கர்த்தா)
சிவஸ்ரீ சோமஸ்கந்த தனஞ்சயக் குருக்கள்
(நெல்லண்டை ஆதீன கர்த்தா)

சிவஸ்ரீ ராமலிங்க சுந்தரலிங்கக் குருக்கள்
பிரபாளினி குடும்பம்
(நெல்லண்டை அம்மன் பிரதம குரு)
சிவஸ்ரீ திருஞான சம்பந்தக் குருக்கள்
ஜீவிதா குடும்பத்தினர்
(முல்லை குமுழமுனை கற்பக விநாயகர் தேவஸ்தானம்)

சிவஸ்ரீ சண்முகரெட்ண பிரசன்னன் குருக்கள்
சங்கீர்த்தனி குடும்பத்தினர்
(திருகோணமலை திருக்கோணேஸ்வர
தேவஸ்தான பிரதம குருக்கள்)

(C-7476)

# 7 நட்சத்திர ஜனநாயகத்தை நல்லாட்சி அரசு வழங்கும்

## நிதியமைச்சர் ரவி தெரிவிப்பு

**(கொழும்பு) நல்லாட்சி அரசாங்கம் வெறுமனே 5 நட்சத்திர ஜனநாயகத்தை தாண்டி 7 நட்சத்திர ஜனநாயகத்தை வழங்கும் அளவுக்கு செயற்பட்டு வருகின்றது என நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கண்டி அஸ்கிரி பீடத்தின் மகா நாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் மற்றும் மல்வத்துபீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் ஆகியோரை நிதியமைச்சர் நேற்று முன்தினம் சந்தித்தார். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## அம்பாந்தோட்டை காணி விவகாரம் அலரி மாளிகையில் விசேட சந்திப்பு

### சமல் ராஜபக்ஷ பங்கேற்பு



(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் முதலீட்டு வலயங்கள் தொடர்பிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பு நேற்றுக் காலை அலரிமாளிகையில் இடம்பெற்றது.

அரசாங்கத்தின் இந்த கலந்துரையாடலில்,முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

இதேவேளை சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர்களான சஜித் பிரேமதாஸ, மகிந்த அமர வீர ஆகியோர் குறித்த சந்திப்பில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அனுமதிப்பத்திரம் இல்லாமல் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தினால் 10 ஆண்டு சிறை

(கொழும்பு)

இலங்கையில் உரிய அனுமதிப்பத்திரமின்றி பேருந்துகளை போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தியுள்ளவர்களுக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிப்பதற்கான அதிகாரம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் தற்போது சுமார் 350 பேருந்துகள் வீதி போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி சேவையில் ஈடுபட்டுள்ளதாக தேசியபோக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளை கண்டுபிடிப்பதற்காக பொலிஸாருக்கு தகவல் வழங்கவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ. பி.ஹேமசந்திர தெரிவித்துள்ளார்.


அனுமதிப் பத்திரமின்றி சேவையில் ஈடுபடும் 350 பேருந்துகளில் 100 பேருந்துகள் வரை மாகாணங்களுக்கு இடையிலான சேவையில் ஈடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறான பேருந்து உரிமையாளர்களுக்கு 10 ஆண்டு சிறைத்தண்டனையை விட நீதிமன்றத்தின் ஊடாக இரண்டு இலட்சம் ரூபா அபராதமும் விதிக்க முடியும் என ஆணைக்குழுவின் தலைவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-7)

## அமைச்சரவை மாற்றம் ஒத்திவைப்பு; ஜனாதிபதி மைத்திரிபால இணக்கம்

(கொழும்பு)

சில நாட்களில் நடக்கவிருந்த அமைச்சரவை மாற்றத்தை ஒத்திவைக்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளதாக, தகவலறிந்த அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.



ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலருடன், கடந்த 3ஆம் திகதியன்று கலந்துரையாடலொன்று நடத்திய பின்னர், இதைப் பல மாதங்களுக்கு ஒத்திவைக்க, ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக, அத்தகவல்கள் மேலும் தெரிவித்தன.

குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள சில அமைச்சர்களை மாற்றுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருப்பதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இலவசக் கல்விக்கு நல்லாட்சி அரசு புதிய உத்வேகத்தை அளித்துள்ளது

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில்இலவசக்கல்வியை வலுப்படுத்துவதற்கு அனைத்து அரசாங்கங்களும் முன்னெடுத்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தற்போதைய அரசாங்கம் புதிய உத்வேகத்தை அளித்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மொரட்டுவை பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற வருடாந்த பரிசரிளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஒரு நாட்டில் கற்றவர்கள் அதிகரிப்பதன் மூலம் அந்நாடு துரிதமாக அபிவிருத்தியடையும்.

பிள்ளைகளை புதிய தொழில்நுட்ப உலகுடன் இணைத்து எதிர்பார்க்கும் வெற்றியை நோக்கி அவர்களை வழிநடத்த தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)

## உடற்பயிற்சி மேம்படுத்தல் வாரம் ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டில் வேகமாக அதிகரித்துவரும் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கமைய விளையாட்டுத்துறை அமைச்சினால் ஏற்பாடு செய்யப்படும் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தேசிய வாரம் நேற்றிலிருந்து 12ஆம் திகதி வரை நாடு முழுவதும் அமுலபடுத்தப்படுகிறது.



அதன் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதியின் தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலக வளாகத்தில் இடம்பெற்றது. அதன் பின்னர் நடைபெற்ற நடைபவனியிலும் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

அதற்கிணைவாக அனைத்து அரச நிறுவனங்களிலும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

"நலம், மகிழ்ச்சி, வெற்றிக்காக விளையாட்டு" என்பது இம்முறை விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தேசிய வாரத்தின் தொனிப்பொருளாகும். இவ்வாரத்தில் இவ்விடயம் தொடர்பான கருத்தாடல்கள், வெளியீடுகள், விரிவுரைகள், பதாதைகளை காட்சிப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் ஊடாக மகக்ள் தெளிவூட்டப்படவுள்ளனர்.

நேற்று அரச, அரச கூட்டுத்தாபன அலுவலர்களின் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தினமாக பெயரிடப்பட்டுள்ளது. இன்று தனியார் துறைக்காகவும், பெப்ரவரி 8ஆம் திகதி சிறுவர் மற்றும் தாய்மார் தினமாகவும், பெப்ரவரி 9ஆம் திகதி மகளிருக்கான தினமாகவும், பெப்ரவரி 10ஆம் திகதி விசேட தேவையுடையவர்களின் தினமாகவும், பெப்ரவரி 11ஆம் திகதி இளையோருக்கான தினமாகவும், பெப்ரவரி 12ஆம் திகதி சமூக பங்களிப்புக் தினமாகவும் பெயரிடப்பட்டுள்ளன.

விளையாட்டின் ஊடாக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான வெற்றிகளை பெறக்கூடியவாறு விளையாட்டுத் திறன்மிக்க ஆரோக்கியமான தலைமுறையினரை உருவாக்குவது இந்த நிகழ்ச்சியின் முதன்மை குறிக்கோளாகும். (இ-7)

## நான் நடிக்கவில்லை

(கொழும்பு)



நான் நடிக்கவில்லை உண்மையை வெளியே கொண்டு வருவதற்காக மட்டுமே நான் செயற்பட்டு கொண்டு வருகின்றேன் என பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அண்மையில் என் மீது பலவகையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. நான் நடிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் நான் நடிக்கவில்லை. முறைகேடான செயலில் ஈடுபட்ட பிரதேச செயலாளரிடம் கொஞ்சிப்பேச வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.

அதே போன்று நான் மூளை உள்ளவர்களிடம் மட்டுமே விவாதத்திற்குச் செல்வேன்.

இந்திக அநுருந்த போன்ற ஒன்றும் இல்லாதவர்களை பிரபல்யப்படுத்த வேண்டிய அவசியமும் தேவையும் எனக்கு இல்லை.

அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக முதலில் செயற்பட்டவனும் நானே. வில்பத்து தொடர்பிலும் கருத்து வெளியிட்டு இருந்தேன் எனவும் ரஞ்சன் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உயிரை மாய்த்தேனும் ...

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பிலக்குடியிருப்பு மக்கள் தமது சொந்த நிலத்தை கையகப்படுத்தியுள்ள விமானப்படையினர் அதனை விடுவிக்கவேண்டுமென விமானப் படை முகாமின் முன்பாக கொட்டும் பனியிரவையும் சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது கடந்த 31ஆம் திகதி தொடக்கம் முன்னெடுத்துள்ள தொடர் கவனயீர்ப்பு போராட்டம் ஏழாவது நாளாக நேற்றும் தொடர்கின்றது.

இன்று பாராளுமன்ற அமர்வு நடைபெற இருப்பதனால் அங்கு இந்த விடயம் குறித்து பேசுவதாக பல பாராளுமன்ற உறுப்பினர்களும் உறுதிவழங்கி இருந்தனர். இந்த நிலையில் இன்று மாலை 6 மணிக்குள் உரிய பதில்கள் கிடைக்காவிட்டால் தமது போராட்ட வடிவம் மாறும் எனவும் இதில் உயிரை மாய்த் தேனும் சொந்த நிலங்களை மீட்பதற்கான வழியை மேற்கொள்வோமெனவும் போராடடத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கேப்பாப்பிலவு பிலக்குடியிருப்பு கிராமத்தில் 84 குடும்பங்களுக்கு சொந்தமான 40 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை கையகப்படுத்தி விமானப்படைத்தளம் அமைத்துள்ள விமானப்படையினர் அதனை பலப்படுத்தி வேலிகள் அமைத்து மக்கள் செல்ல முடியாதவாறு தடைகளை ஏற்படுத்தியுள்ளனர். இந்த நிலையில் கடந்த மாதம் 31ஆம் திகதி காணிகள் அளவிடப்படும் எனவும் காணிகளுக்கு சொந்தமான மக்கள் அனைவரையும் அப்பகுதிக்கு வருமாறும் கேப்பாப்பிலவு கிராமசேவகர் அறிவித்தல் விடுத்திருந்த நிலையில் அப்பகுதிக்கு வருகைதந்திருந்தமக்கள் நாள் முழுவதும் வீதியில் காத்திருந்த போதும் அதிகாரிகள் எவரும் காணிகள் அளவிட வருகைதந்திருக்கவில்லை. இந்த நிலையில் ஆத்திரமடைந்த மக்கள் அன்றைய தினம் முதல் தாம் தமது சொந்த நிலங்களில் காலடி எடுத்து வைக்கும் வரை போராட்டம் தொடருமென கூறி தொடர் போராட்டத்திலீடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த 01 ஆம் திகதிக அன்று குறித்த போராட்டம் இடம்பெறும் பகுதிக்கு முல்லை மாவட்ட அரச அதிபரும், கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளரும் மற்றும் வன்னி பிராந்திய விமானப்படை தளபதியும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்கள் என பலரும் வருகை தந்து மக்களோடு கலந்துரையாடி சமரச முயற்சிகளில் ஈடுபட்ட போதிலும் மக்கள் உறுதியான நிலைப்பாட்டில் தமது சொந்த நிலத்தில் காலடி எடுத்து வைத்தால்தான் இந்த போராட்டம் நிறைவு பெறும் என கூறி தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இந்த நிலையில் ஏழாவது நாளாக நேற்றும் இந்த மக்களின் போராட்டம் தொடர்ந்து வருகின்றது. ஏழாவது நாளாக தொடர்ந்த இந்த போராட்டத்துக்கு பல மக்கள பிரதிநிதிகளும் வருகைதருந்ததை அவதானிக்கமுடிந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் வடக்குமாகாணசபை உறுப்பினர் ரவிகரன், மற்றும் புவனேஸ்வரன் ஆகியோர் வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடினர்.

அத்தோடு மக்கள் தமது உணவுகளை தாமே மரங்களுக்கு கீழே சமைத்து உண்டு வருகின்றனர்.அத்தோடு இந்தப்போராட்டக் களத்தில் உள்ள மாணவர்கள் வீதி ஓரத்திலேயே தமது பாடசாலையில் வழங்கப்பட்ட வீட்டு வேலைகளை செய்வதோடு அனைவரும் இணைந்து தமது கல்விநடவடிக்கைகளை மேற்கொள்வதனை அவதானிக்க முடிகின்றது.

நேற்றைய தினம் இந்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இடத்திற்கு விசேட மருத்துவக்குழு ஒன்று முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையிலிருந்து வருகைதந்து சளி, இருமல், காய்ச்சல் போன்ற வருத்தங் களாலும் ஏனைய வருத்தங்களாலும் பாதிக் கப்பட்ட சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் பெண்கள் அனைவருக்கும் மருத்துவ பரிசோதனைகள் நடத்தி மருந்துகளும் வழங்கப்பட்டது.

இதேவேளை இந்த மக்களின் போராட்டம் வெற்றிபெற ஆசிவேண்டி கேப்பாப்பிலவு முத்துவிநாயகர் ஆலயத்தில் உள்ள பூசாரி ஒருவர் தொடர் சிவ வழிபாட்டு பூசை ஒன்றினை நேற்று முதல் ஆரம்பித்தார்.

இரவு நேரங்களில் கடும் பனி பொழிந்து வருவதோடு அந்த பனிப்பொழிவி லும் மக்கள் திறந்த வெளியில் வீதியில் நனைத்தபடி உறங்குவதையும் வெயில் நேரத்தில் சிறுவர்கள் வீதியில் உள்ள மதகுகளின் கீழ் இருப்பதனையும் அவதானிக்க முடிகின்றது.

போராட்டத்தில் ஈடுபடும் மக்களுக்கான உணவு மற்றும் இதர உதவிகளை அயல் கிராம மக்களும் இளைஞர்களும் சிவில் சமூக அமைப்புகளும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் நேற்றையதினம் முல்லைத்தீவு மற்றும் முள்ளியவளை பொதுசுகாதார பரிசோதகர்களால் போராட்ட களத்திலுள்ள மக்களின் சுகாதார வசதிகள் குறித்து ஆராயப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப் பட்டது (செ - 281)

## கலாசார பேரவை - பிரதேச செயலகம் கரைதுறைப்பற்று

அன்புடையீர்!

கரைதுறைப்பற்று கலாசார பேரவையினால் எதிர்வரும் வைகாசி மாதம் வெளியிடப்படும் சிலம்போசை மலரில் ஆவணப்படுத்தலுக்கென தங்கள் வசமுள்ள வன்னி வரலாறு சார்ந்த வரலாற்றுக் கட்டுரைகள், பாரம்பரிய புராதனப் பொருட்கள் அல்லது அவற்றின் புகைப்படங்கள் போன்றவற்றை மென்பிரதிகளாகவேனும் புகைப்படப் பிரதிகளாகவேனும் 2017.03.01ம் திகதிக்கு முன் வழங்கி உதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

விழாக்குழு
கலாசார பேரவை,
பிரதேச செயலகம்,
கரைதுறைப்பற்று.

(C-7477)

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் : 0212290038
மின்னஞ்சல் முகவரி : dsoffmpp@gmail.com

இச் சத்துமா கடந்த யாழ்ப்பாணம் சர்வதேச சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று வரை எந்த உணவு தயாரிப்பாளர்களும் 15 தானியங்களுடன் சத்துமா தயாரித்ததில்லை. நூற்றுக்கு மேற்பட்ட கோரிக்கைகள் வந்தபடி உள்ளன. கடந்த 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட வலம்புரி பத்திரிகையில் விளம்பரமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இன்று 07/02/2017 செவ்வாய்க்கிழமை ஆஸ்பத்திரி வீதி (இலங்கை வங்கி மேற்தர கிளைக்கு அருகாமையில்) உள்ள உணவகத்தில் (Canteen) விரும்புபவர்கள் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

**BIO TEC International Ltd**

Date of manufacture : 25.01.2017
Date of Expiry : 24.01.2018
Price : Rs. 550

Bio Tec Orient (Pvt) LTD
131/2, Palaly Road,
Thirunelvely, Jaffna, Sri lanka.
T.P : (021) 4590907, 0777048181
e -mail : kanbalasub@yahoo.co
web : www.bioteclanka.com
(7865)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
20.08.1946



மறைவு
11.01.2017

### அமரர். திருமதி சிதம்பரநாதன் அன்னலட்சுமி

11/01/2017 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி சிதம்பரநாதன் - அன்னலட்சுமி அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், மற்றும் பல வழிகளில் பிரிவுத்துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 08/02/2017 புதன்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 10/02/2017 வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

இல, 9/3, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்

தகவல்
குடும்பத்தினர்

(7859)

## பெயர் மாற்ற அறிவித்தல்

பழனி ஆண்டவர் கோவிலடி, கோண்டாவில் கிழக்கை சேர்ந்த திருமதி ஐயாத்துரை - மகேஸ்வரி ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை கமலாதேவி என மாற்றியுள்ளேன். எனவே கமலாதேவி என்கின்ற பெயரையே இனி எனது சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
திருமதி ஐயாத்துரை - கமலாதேவி

(7848)

## காணி விற்பனை

A9 வீதி நுணாவில் சந்திக்கு அருகில் மட்டுவில் வீதியில் (150m) தூரத்தில் $5^1/_2$ பரப்பும் துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 10 பரப்பும் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு :
0778730129

(7866)

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
09.12.1969



கர்த்தருக்குள் நித்திரை
07.02.2009

### அருளானந்தம் - அருள்றூபன்

ஆண்டுகள் எட்டானது
நீங்கள் இவ்வுலகில் இல்லாமல்
உங்களுடன் வாழ்ந்த நாட்கள்
சொர்க்கம் தான் - கண்களில்
ஈரத்துடன் உங்கள் புத்திமதிகளைப்
பின்பற்றி மீண்டும் எம்முடன்
இருக்க மாட்டீர்களா என
ஏங்கி நிற்கின்றோம்.

தபாற்கந்தோர் அருகாமை,
யோகபுரம் மல்லாவி.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, மனைவி,
மகன், சகோதர சகோதரிகள்

(7867)

# அர்ஜுன மகேந்திரன் 66 மில்லியன் ரூபாவை சொந்தத் தேவைக்காகப் பயன்படுத்தினார்

## ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பு குற்றச்சாட்டு

**(கொழும்பு)**

**முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மத்திய வங்கியின் 66 மில்லியன் ரூபாவை தனது சொந்த தேவைக்காக பயன்படுத்தியதாக ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. 163 சந்தர்ப்பங்களில் அவர் இந்த நிதியை செலவு செய்துள்ளதாக அமைப்பின் ஏற்பாட்டாளர் வசந்த சமரசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**



மத்திய வங்கியின் உள்ளக கணக்காய்வு திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை அடிப்படையாக கொண்டு இந்த குற்றச்சாட்டை முன்வைப்பதாக அவர் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை ஏற்றதில் இருந்து 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரை மகேந்திரனின் வெளிநாட்டு விஜயங்கள் மற்றும் கடனட்டை பாவனை தொடர்பான விபரங்கள் மத்திய வங்கியின் உள்ளக கணக்காய்வு திணைக்களத்தினால தயாரிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

163 சந்தர்ப்பங்களில் செல்லுபடியான விலைப்பட்டியலை சமர்ப்பிக்க முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் தவறியுள்ளதாக வசந்த சமரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு சந்தர்ப்பத்தில் 20 இலட்சம் ரூபாவிற்கு ஆடையொன்றை அவர் கொள்வனவு செய்துள்ளதாகவும் தெரிவிக்ககப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் பிணைமுறி விற்பனை விவகாரம் குறித்த கோப் குழுவின் அறிக்கையில், அர்ஜுன மகேந்திரனுக்கு நேரடிப் பொறுப்பு உள்ளதாகவும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவில் தமது அமைப்பு முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பின் ஏற்பாட்டாளர் வசந்த சமரசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## அமைச்சரவை மறுசீரமைப்பில் அவசரம் தேவையில்லையாம் அமைச்சர் அமரவீர கூறுகிறார்

(கொழும்பு)

அமைச்சரவை மறுசீரமைப்பு நடவடிக்கையில் அவசரம் காட்டத் தேவையில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். அமைச்சரவையை மறுசீரமைக்குமாறு சில குழுக்கள் கோரியுள்ளதாக குறிப்பிட்ட மகிந்த அமர வீர, அவ்வாறான மறுசீரமைப்புகள் உடனடியாக மேற்கொள்ளப்படாது எனவும் கூறியுள்ளார். அமைச்சரவை மறுசீரமைப்பு தொடர்பில் அரசியல் மேடைகளில் பேச்சுக்கள் வலுப்பெற்றுவரும் நிலையில் அமைச்சர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

சில அமைச்சர்கள் அமைச்சரவை மறுசீரமைப்பு அவசியம் என பகிரங்க அறிக்கைகளை வெளியிட்டுவரும் நிலையில், மற்றுமொரு பிரிவினர் இவ்வாறான மறுசீரமைப்பு அவசியமில்லை என கூறிவருகின்றனர். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மூத்த உறுப்பினர்களும் ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர்களும் ஜனாதிபதியை கடந்த 4ஆம் திகதி சந்தித்து அமைச்சரவை மறுசீரமைப்பு குறித்து கலந்துரையாடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


### வைத்தியம்

குழந்தையின்மை, ஆண்மை குறைபாடுகள், முள்ளந் தண்டு நசிவுகள், மூட்டு வாதங்கள், சலரோகம், ஆஸ்துமா, உடல் பருமன் கூடுதல்/குறைதல், தலைமுடி உதிர்தல், தழும்புகள், வயிற்று சுருக்கங்கள் மறைய, சகல நோய்களுக்கும் எம்மிடம் தீர்வு உண்டு.

தொடர்பு:- சான்ஸ் ஹெல்த் கெயர்,
255, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில். (முன்பதிவு அவசியம்)
077 035 7307, 077 407 2058







## இராசி பலன்

07.02.2017

(தை 25, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
ஏகாதசி பிற்பகல் 1.23 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 1.29 மணிவரை
சுபநேரம் 11.05-12.35 மணிவரை
இராகுகாலம் 3.35-5.05 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக் | | | சந் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் விசாகம், அனுசம் | | |
| சூரி புத | | | ராகு |
| | சனி | குரு | |

**மேடம்:** சவால்களை சமாளிக்கும் நாள், சகோதரர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், பகையொன்று நட்பாகலாம்.

**இடபம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வியாபார விருத்தியுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயமாகலாம், மகிழ்ச்சி அதிகரித்து மன மாற்றம் காணும் நாள்.

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**சிம்மம்:** நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் இடம் பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கன்னி:** காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள்வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண நினைப்பீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம்.

**தனுசு:** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள் ,நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு, வெளியூர் பயணமொன்றால் ஆதாயமுண்டு.

**மகரம்:** மனையில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பிரியமானசிலரின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கும்பம்:** பிள்ளைகளின் சுப காரியங்களை நடத்தும் எண்ணம் உருவாகும், பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:** புதிய நபர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, உடன் பிறப்புக்களால் உற்சாகம் பெறும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

# மரக்கன்றுகள் விநியோகம்

பசுமையான எதிர்காலத்திற்கான நிறுவனத்தினால் அம்பன் கிழக்குப் பகுதியில் மீளக் குடியமர்ந்த 35 குடும்பங்களுக்கு பயன் தரு மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைப்பின் உப தலைவர் இ.முரளிதரன், செயலாளர் த.காண்டீபன் ஆகியோர் மரக்கன்றுகளைவழங்கிவைத்தனர். இங்கு வசிக்கும் குடும்பங்களுக்கு 400 வரையான மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (இ-60)






(யாழ்ப்பாணம்)

ஆரோக்கியமான வாழ்வொன்றை கட்டியெழுப்புவோம் மற்றும் நிரந்தர எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்போம் எனும் தொனிப்பொருளில் நடைபவனி ஒன்று அண்மையில் கரவெட்டி பிரதேச செயலகத்திலிருந்து நடைபெற்றது. இந் நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலர் ச. சிவசிறி, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி சுதோக்குமார் தலைமையிலான அணியினர் நடைபவனி மேற்கொண்டனர். அத்துடன் மாலு சந்தி மைக்கல் விளையாட்டு மைதானத்தில் உடற்பயிற்சியும் நடைபெற்றது.

(படம்- மகாலிங்கம்)

## செயற்பட்டு மகிழ்வோம்

யா/மூளாய்அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் திறனாய்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

பாடசாலைஅதிபர் இ.லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மூளாய் ஜே/171 கிராம உத்தியோகத்தர் இராசரத்தினம் சிறிரஞ்சன், சிறப்பு விருந்தினராக பொது சுகாதார பரிசோதகர் இராசரத்தினம் றெனோஜ், கௌரவ விருந்தினராக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சாரங்கன் தயாளினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும். பாடசாலை அதிபர் ச. சத்தியவரதன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் கணக்காளர் ஏ.கிரிதரன், கௌரவ விருந்தினராக பழைய மாணவன் சு. முத்துராஜலிங்கம் (கனடா) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-134)

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

(யாழ்ப்பாணம்)

சமரபாகு நியூட்டன் சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் நியூட்டன் விளையாட்டுக் கழகமும் நியூட்டன் ஐரோப்பிய ஒன்றியமும் இணைந்து நடத்தும் மாபெரும் 43வது வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் 9ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நியூட்டன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும். காலை 6 மணிக்கு ஆண் கள், பெண்களுக்கான மரதன் ஓட்டம் இடம்பெறும். (3-60)

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

(யாழ்ப்பாணம்)

யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் மைதானதத்தில் இடம் பெறும். பாடசாலை அதிபர் கோ. பத்மநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் இம்மானுவேல் ஆனல்ட், சிறப்பு விருந்தினராக அல்லைப்பிட்டி பங்குச்சந்தை அருட்பணி எம்.டேவிற் அடிகளார், வேலணை மேற்கு ஜே/19 கிராம அலுவலர் சி. இரட்ணேஸ்வரன், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோக்த்தர் க.விஜிதரன், ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# விருது வழங்கல் விழா

மாவட்டமட்டத்தில் மக்களுக்கு பயன்மிகு சேவையாற்றிய கிராம அதிகாரிகளுக்கு இன்று செவ்வாய்க்கிழமை மறைந்த கிராம அலுவலர் நவாலியூர் ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராககலந்துகொண்டு விருதுகளையும் சான்றுகளையும் வழங்கி கௌரவிப்பார்.

யாழ்.மாவட்ட பிரதேச செயலாளர் மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்ற கிராம அதிகாரிகளுக்கும் மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று (1ம்,2ம,3ம்) இடங்களை பெற்ற கிராம அதிகாரிகளுக்கும் சான்றிழ்களும் விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன.

இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் வைத்து மறைந்த கிராம அலுவலர் நவாலியூர் ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்தமாக விருது வழங்கல் நிகழ்வு இடம்பெறும. (இ)

## மணவாளக்கோலம்

மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மணவாளக்கோல உற்சவம் நாளை 8 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

இதில் 1008 சங்காபிஷேகம், விசேட பூஜை என்பன இடம்பெற்று இரவு அம்மன் வீதியுலா வருதலும் திருவூஞ்சலும் இடம்பெறும். (இ-3-60)

# புதிய மாணவர்களை இணைக்க இன்றிலிருந்து நேர்முகத் தேர்வு

கல்வியியல் கல்லூரிகளுக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நேர்முகப் பரீட்சைகள் இன்று ஏழாம் திகதியிலிருந்து நடைபெறவுள்ளதாக கல்வியியல் கல்லூரி பிரதம ஆணையாளர் கே.எம்.எச். பண்டரா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

பஸ்துன்ரட்ட மற்றும்மஹரகம ஆகிய பிரதேசங்களின் கல்லூரிகளை தவிர நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கல்வியியல் கல்லூரிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று ஏழாம் திகதியிலிருந்து நடைபெறவுள்ளது.

இக் கல்வியாண்டுக்கு 4 ஆயிரத்து 69 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர் 2014 ஆம்ஆண்டுகபொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய, கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை 08 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும்.

இதில் விநாயகப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும் பரிவார தேவர்களுக்கு 108 சங்காபிஷேகமும் இடம்பெறும்.

நண்பகல் அன்னதானமும் வழங்கப்படும். (இ-3)

## பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் மாசி மாத பகிரங்க ஏல விற்பனை நாளை 8ஆம் திகதி புதன் கிழமை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அரசாங்க மரக் கூட்டுத்தாபனவிற்பனைநிலையத்தில் இடம்பெறும். மேலதிக தகவல்களுக்கு 021 222 2349 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமைஅரசாங்க மரக் கூட்டுத்தாபன நல்லூர் விற்பனை நிலையத்திலும் (021 221 6610) 15 ஆம் திகதி புதன் கிழமை அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுசுட்டான் விற்பனை நிலையத்திலும் (021 206 1789), 20 ஆம் திகதி திங்கட்கிழமை கிளிநொச்சி விற்பனை நிலையத்திலும் (021 228 5409) இடம் பெறவுள்ளன. (இ-3)

# கிராம அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல் இன்று

கோப்பாய் தெற்கு கிராம அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இருபாலை தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இக் கூட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளரும், அபிவிருத்தி தொடர்பான அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-134)

# மனைப் பொருளியல் கண்காட்சி


(யாழ்ப்பாணம்)

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தீவகம் தெற்கு, வேலணை பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் மண்டைதீவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடை வடிவமைத்தல், அழகுக் கலை, மனைப் பொருளியல் கண்காட்சி நாளை மறுதினம் 9 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யா/ மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெறும் வேலணை பிரதேச செயலர் திருமதி. சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன், வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன், யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.பஞ்சலிங்கம், கௌரவ விருந்தினர்களாக யா/ மண்டைதீவு மகா வித்தியாலய அதிபர் கே.எஸ். இளங்கோ, ஜே/07,08 கிராம உத்தியோகத்தர் எம்.சசிகாந்த், ஜே/09 கிராம உத்தியோகத்தர் என்.உதயராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகள் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்: 177cm<br>தகைமை/தொழில்:Diploma/ முகாமையாளர் அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/6881 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 23 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/4144 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:BBA/ஆசிரியர்<br>தொ.இ: B/6882 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரமஅத்தம்<br>கி.பா: 70செவ் 8 ல்<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/4146 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 33<br>உயரம்: 6’<br>தகைமை/தொழில்:BED/ஆசிரியர்<br>தொ.இ: B/6883 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 62செவ் 12 இல்<br>தகைமை/தொழில்:MA/அரச தொழில்<br>தொ.இ: G/4153 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 36<br>உயரம்: 172cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ அரசதொழில்<br>தொ.இ: B/6886 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 2<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:BAதொ.இ: G/4157 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.



# அகவை 17ல் நினைவுருக்கம்

## சண்முகநாதன் சந்துதன் [சந்துக்குட்டி]


எமக்காய் : 07.02.2000
ஆண்டவனுக்காய் : 08.09.2009



அன்பு மகனே ஆருயிர் புத்திரனே செல்வ மகனே சந்துக்குட்டி
பார் போற்றும் பிள்ளையாய் அகவை 9 வரை எம்மோடு
வாழ்ந்து எம்மை அகமகிழ வைத்தாய் மகனே!
8 ஆண்டுகளாய் எமை பிரிந்து எம் அகத்தை துன்பத்தில்
துவள வைத்தது தான் ஏன் என்று தெரியவில்லை
உன் பிறந்த நன் நாள் சுற்றம் சூழ எல்லோரும்
குதூகலித்து கொண்டாடிய நாட்கள் நிழலாக தெரிகின்றது
கண்ணே! கண்களை குருடாக்கி நினைவுதனை
மறைத்து வாழ முடியவில்லை ராசா இன்று நீ இருந்தால்
கண் கவரும் கட்டிளங்காளையாக பருவமடைந்து பக்குவமாய்
வாழ்ந்திருப்பாய் என எண்ண எண்ண இதயம் துடிக்குதய்யா
செல்வமகனே சீருற்ற புத்திரனே ! நாம் உன்னை நினைக்காத
நிமிடம் இல்லையடா! காலம் கடந்து விட்டால்
நினைவுகள் மறந்துவிடும் என்ற வார்த்தையை பொய்யாக்கி
விட்டாயடா காலங்கள் செல்ல செல்ல உன் வளர்த்தி எப்படி
இருக்கும் என்று கற்பனை பண்ணியே கலங்கி துடிக்கின்றோம்
உமை மறந்தால் தான் நினைப்பதற்கு என்றால் உம் பிறந்தநாள்
வருகையிலே எம்மனது அனலாய் கொதிக்கின்றது ராசா
நீ பிரிந்தகாலம் தொட்டு நீ வருவாய் என்னும் நினைப்பில்
நீ துயிலும் இல்லத்திற்கு அனுதினம் சென்று
கூட்டி பெருக்கி உன் வரவை எதிர்பார்க்கும் உனது
அப்பாவிற்கு நீ கூறும் பதில்தான் என்ன? உமை பிரிந்த
துயரமானது என்றென்றும் ஆறாது ஆனாலும் ஆறியிருக்கின்றோம்
உமை காணும் நாளில் தான் முழுமையான
ஆறுதலை நாம் பெறுவோம் இந் நாளில் எமது கண்ணீர் பூக்களால்
அர்ச்சித்து நிற்கும் உமது பெற்றவர்கள்

தந்தை சண்முகநாதன்
தாய் அருள்நங்கை

சகோதரர்கள் :- தேவசந்துதன்
தேவசாத்வீகன்



"லட்சுமி" சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

(C 7472)

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலக

# அனைத்து வாயில்களை மூடி பணியாளர்களை உட்செல்ல அனுமதியாது மக்கள் போராட்டம்







(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் பொது மக்களின் காணிகளிலுள்ள இராணுவத்தை வெளியேறுமாறு கோரியும் ஏழாவது நாளாக தொடர் போராட்டத்தில ஈடுபட்டுள்ள கேப்பாபுலவு, பிலவுக் குடியிருப்பு மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் நேற்றுக் காலை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோரை செயலகத்தினுள் உட்பிரவேசிக்க முடியாதவாறு அனைத்து வாயில் கதவுகளையும் மூடி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தை இயங்கவிடாது பணிகள் அனைத்தையும் முடக்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இதன்போது சம்பவ இடத்திற்கு விரைந்த புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சி.சிவமோகன், பிரதேச செயலர் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடி எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர்சிறந்ததீர்வொன்றை முன்வைப்பதாகக் கூறியதற்கு இணங்க அம் மக்கள் பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டதில் இருந்து விலகி செயலக நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் தொடர்ந்து நான்காவது நாளான நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றைய போராட்டத்தில் புதுக்குடியிருப்பு பகுதி இளைஞர் கழகம், விளையாட்டுக்கழகம், கிராம அபிவிருத்தி சங்கங்கள் என பல்வேறுபட்ட தரப்பினர் கலந்து கொண்டு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு ஆதரவு வழங்கியிருந்தனர்.

போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் கருத்துக் கூறுகையில்,


கடந்த 8 வருடங்களாக எமது காணிகள் விடுவிக்கப்படவில்லை. இனியும் பொறுமையாக இருக்க முடியாது.

இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்துள்ள எமது காணிகளை விட்டு வெளியேறும் வரை இந்த இடத்தை விட்டு வெளியேற மாட்டோம்.

எங்கள் காணிகள் கிடைக்கும் வரை நாங்கள் இங்கே கிடந்து சாவோம். இராணுவ முகாமை அகற்றுவதற்கு அனைவரும் ஒன்றுபடுங்கள், ஒத்துழைப்பு வழங்குங்கள் என அம் மக்கள் தெரிவித்தனர். (2-281-310-15)

## காணி விடுவிப்பு போராட்டத்தை தெளிவுபடுத்த துண்டுப்பிரசுரம்

### இளைஞர்களால் நேற்று விநியோகம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கேப்பாபுலவு பிலவுக் குடியிருப்பு மக்கள் தமது சொந்த நிலத்தை கையகப்படுத்தியுள்ள விமானப்படையினர்விடுவிக்கவேண்டுமென வலியுறுத்தி விமானப் படை முகாம் முன்பாக இரவு பகலாக தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை நேற்று ஏழாவது நாளாகவும் முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களுக்கு ஆதரவாகவும் காணி விடுவிப்பு விடயத்தை தெளிவுபடுத்தும் முகமாகவும் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு கோரியும் இளைஞர்களால் நேற்றைய தினம் வீதியால் பயணித்துக் கொண்டிருந்த வாகனங்களின் சாரதிகள், பொதுமக்கள் ஆகியோருக்கு துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. (2-281)




# மக்களுக்கு பாதுகாப்பான சேவையை வழங்குங்கள் இல்லையேல் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் கோரிக்கை

பொதுபோக்குவரத்துசேவைகளை வழங்கும் தரப்பினர்கள் அடுத்தவர்களது உயிர் மீது அக்கறையுள்ளவர்களாக செயற்பட வேண்டும். மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண போக்குவரத்து அமைசசா பா. டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு, பொது மக்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்து சேவை வழங்குவதென்பது மிகுந்த சவாலுக்குட்பட்டதாகவே காணப்படுகின்றது. அதற்கான காரணங்களைக கண்டறிந்து சீர் செய்வது எமது ஒவ்வொரு வரதும் கடமையாகும்.

எமது மாகாணத்தில் தினந்தோறும் ஏதோ ஓர் மூலையில் வீதி விபத்தால் மக்களது பெறுமதிமிக்க உயிர்கள் வீணாக பறிக்கப்படுவதும், பலர் நிரந்தர மாற்றுத் திறனாளிகளாக மாற்றப்படுவதும அதற்கிந்தவண்ணமேஉள்ளன,

போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற தரப்பினர்கள் வீதி ஒழுங்குகளை ஒழுங்காக பின்பற்றாது நடப்பதும், மேலும்போக்குவரத்துசேவையை வழங்கும் தரப்பினருக்கிடையில் காணப்படுகின்ற கனெமூடித்தனமான போட்டித்தன்மையும், ஓர் சீரான இணைந்த நேர அட்டவணையை பின் பற்றாமையும், வீதியில் பயணிக்கின்ற ஒரு சில பொதுமக்களின் அசமந்தப்போக்கும் முக்கிய காரணங்களாக காணப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்ட புதிய மத்திய பேருந்து நிலையம் உத்தியோகபூர்வமாக திறந்து மக்களது பாவனைக்கு கொடுககப்பட்டது. அன்றைய தினமே இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் துறையினர் ஆகிய இரண்டு தரப்பினரையும் குறித்த புதிய பேருந்து நிலையத்தில்இருந்தே தமது சேவைகளை வழங்க வேண்டுமென்றஓழுங்கையை சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் அமைச்சரால் வழங்கப்பட்டது.

குறிப்பாக இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து சேவையை வழங்காமல் இருப்பார்களென்று சொன்னால் மீறுகின்ற தரப்பினர் மீது தான் உரிய நடவடிக்கைகள்எடுப்பதாகவும் வேண்டுமானால் சம்பளத்தை நிறுத்துவதாகவும் அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா கூறியிருந்தார் என்பதனை இங்கு தெளிவாக சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

இணைந்த நேர அட்டவணை தற்போது தயாராக உள்ளது. அதனை அமுல் படுத்துகின்ற போது அதற்கு எதிராக செயற்படுகிறவர்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறுகேட்டுக்கொண்டேன்

இச் செய்தி பிழையாக திரிபுபடுத்தப்பட்டு இலங்கை போக்குவரத்து சபையின் சாரதி நடத்துநர்களுக்கு கூறப்பட்டுள்ளதாக தற்போது அறியமுடிகின்றது. போக்குவரத்து சேவைகளை ஒழுங்குபடுத்தும்போது அதிகாரிகளுக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் சரியான ஒத்துழைப்பை வழங்கினால் மட்டுமே மக்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்து சேவையை வழங்கமுடியும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்

மேலும் கொடும்பாவி எரிப்பதனால் அநீதி நீதியாகிவிடாது. நீதி அநீதியாகிவிடாது. ஆகவே பொதுப் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற அனைத்து தரப்பினரும் ஒற்றுமைப்பட்டு எமது பொதுமக்களுக்கு பாதுகாப்பான சேவை வழங்குவதற்கு முன்வாருங்கள், இல்லையேல்சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும தெரிவித்துள்ளார். (2-9)



முல்லைத்தீவு - பரந் தன் வீதியிலுள்ள கண்டா வளை பாலத்தை அண் மித்த பகுதியில் வேகக் கட் டுப்பாட்டை இழந்த கன்ரர் ரக வாகனம் வீதியை விட்டு விலகி அருகில் இருந்த வாய்க் காலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானதை படத்தில் காணலாம். இச் சம்பவம் நேற்று காலை 9 மணியளவில் நடை பெற்றுள்ளது. (படம்- வற்றாப் பளை செய்தியாளர்)

## நிகழ்வின் போது பரிமாறப்பட்ட

# பிளாஸ்ரிக் கப்பில் அடைக்கப்பட்ட குளிர்பானத்தினுள் கழிவுப்பொருள்

## வவுனியா நகரசபை செயலாளரிடம் முறையீடு

(குருமன்காடு)

வவுனியா, பசார் வீதியில் உள்ள பிரபல தனியார் சுப்பர் மார்க்கெட் ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட அடைக்கப்பட்ட குளிர்பானத்திற்குள் கழிவுப் பொருள் காணப்பட்டுள்ளதையடுத்து, வவுனியா நகரசபையிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பசார் வீதியில் உள்ள பிரபல தனியார் சுப்பர் மார்க்கெட் ஒன்றில் கடந்த 4 ஆம் திகதி சனிக்கிழமை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றுக்காக பிளாஸ்ரிக் கப்பில் அடைக்கப்பட்ட குளிர்பானங்களை ஒருவர் கொள்வனவு செய்துள்ளார்.



நிகழ்வின்போது அவற்றை பரிமாறியுள்ளனர். இதன்போது அதனை திறந்து குடித்த சிலர் குளிர்பானத்தின் அடிப்பகுதியில் கழிவுகள் இருந்ததைக் கண்டுள்ளனர்.

இதனையடுத்து அதனைப் பெற்றவர்கள் நிகழ்வு ஏற்பாட்டாளர்களிடம் தெரியப்படுத்தியிருந்தனர்.

அவர்கள் வவுனியா நகரசபைச் செயலாளர் இ.தயாபரனின் கவனத்திற்கு கொண்டு வந்ததை யடுத்து, உடனடியாகவே குறித்த சுப்பர் மார்க்கெட்டுக்கு சென்ற வவுனியா நகரசபை செயலாளர் மற்றும் சுகாதார பரிசோதகர்கள் பெட்டி ஒன்றில் பொதி செய்யப்பட்டிருந்த கப்பில் அடைக்கப்பட்ட குளிர்பானங்களை கைப்பற்றியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. (2-250-15)

# வட்டக்கச்சி கிராம அலுவலரின் காணியில் மிதிவெடி மீட்பு



(பரந்தன்)

கிளிநொச்சி வட்டக்கச்சியில் உள்ள கிராம அலுவலர் காணியிலிருந்து மிதிவெடி ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

வட்டக்கச்சி சில்வா வீதியில் அமைந்துள்ள கிராம அலுவலர் காணியில் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்ட போதே காணியில் மிதிவெடி காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து இராமநாதபுரம் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் அறிவிக்கபட்டு அவர்களால் மீட்கப்பட்டு நேற்று திங்கட்கிழமை விசேட அதிரடிப்படையினரால் செயலிழக்கச்செய்யப்பட்டது.

குறித்த காணியில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு ஏழு வருடங்களாக குறித்த குடும்பம் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-312)





# சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி வைப்பு

(குருமன்காடு)

வவுனியா பாவற்குளம், சூடுவெந்த புலவு மற்றும் மாங்குளம் பகுதி மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

வவுனியா, பாவற்குளம்பகுதி மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்குவ தற்கான திட்டத்திற்கு அடிக்கல்லை நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு




அமைச்சர் ரவூப் ஹக்கீம் நாட்டி வைத்தார்.

அத்துடன் செட்டிகுளம், மாங்குளம், சூடுவெந்த புலவு ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இவற்றுடன் செட்டிகுளம், மாங்குளம்பகுதியில் அமைக்கப்பட்ட உள்ளக வீதி ஒன்றினையும் அமைச்சர் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் பிரதி சுகாதார அமைச்சர் பைஸர் காசிம், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முத்தலிப் பாவா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (2-250)

# கிளிநொச்சி புகையிரத நிலையத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகு வசதியை பயன்படுத்த முடியாத நிலையில் அமைப்பு



(பரந்தன்)

கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு என அமைக்கப்பட்டுள்ள அணுகு வசதியை மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்த முடியாத நிலையில் அமைக்கப்பட்டுள்ளதால் மாற்றுத்திறனாளிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த அணுகு வசதி வழியானது மாற்றுத்திறனாளிகள் சக்கர நாற்காலியுடன் செல்வதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்படவில்லை என்றும், அதன் சரிவு தன்மையானது சக்கர நாற்காலிக்குரிய வகையில் அமைக்கப்படவில்லை என்றும் மாற்றுத்திறனாளிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்தோடு பொதுக் கட்டடங்களில் அணுகு வசதி அமைக்கப்பட வேண்டும் என்றும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதும் பெரும்பாலான இடங்களில் அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்றும், இதனால் தங்களின் சுதந்திரமான நடமாட்டம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மாற்றுத்திறனாளிகள் தெரிவித்துள்ளனர்.

சில பொது கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகளின் மேல் மிகவும் அக்கறை செலுத்தி அணுகும் வசதிகள் மாபிள்கள் பதித்து அமைக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவ்வாறு அமைக்கப்படும் வழியை தங்களால் பயன்படுத்த முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (2-312)

## பாடசாலைகள், கல்வி அலுவலகங்களில்

# ஏப்ரல் மாதத்தில் இருந்து பிளாஸ்ரிக் பொருட்கள் பயன்படுத்துவதற்கு தடை

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வி அமைச்சிற்கு உட்பட்ட 12 கல்வி வலயங்களின் கீழ் உள்ள அனைத்து பாடசாலைகள் மற்றும் கல்வி அலுவலகங்கள் அனைத்திலும் "பூமி தினத்தை" முன்னிட்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி சனிக்கிழமை முதல் எல்லா வகையான பிளாஸ்ரிக் பொருட்களும் பாவனையில் பயன்படுத்துவதை தடை செய்யவுள்ளதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பாடசாலை அதிபர்களுக்கு சுற்று நிருபம் ஊடாக அறிவித்துள்ளார்.

அச் சுற்று நிருபத்தின் படி, நாம் இன்று எதிர்நோக்கி வரும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் பிளாஸ்ரிக் கழிவுகளே தலையாய பிரச்சினையாகவுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு மத்திய அரசாங்கம் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 20 மைக்ரோன்கள் அல்லது அதற்கு குறைவான தடிப்புடைய பிளாஸ்ரிக் பைகளை உற்பத்தி செய்யவும் விற்பனை செய்யவும் பயன்படுத்தவும் தடை விதித்துள்ளது.

இதனை 1980 ஆம் ஆண்டின் சுற்றாடல் சட்டத்தின் படி 2007 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் தடை விதித்துள்ளது.

இச்சட்டத்தை மீறுபவர்கள் 10 ஆயிரம் ரூபாய் குற்றப்பணம் அல்லது 2 வருடத்திற்கு குறையாத சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

எனினும் வடக்கில் இச்சட்டம் பூரணமாக இது வரை நடைமுறைக்கு வரவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு வடக்கு மாகாண சபையின் 82 ஆவது அமர்வு கடந்த ஜனவரி மாதம் 20 ஆம் திகதி கைதடியில் நடைபெற்ற போது வடக்கு மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும் மற்றும் திணைக்களங்களிலும் "பூமி தினமான" எதிர்வரும் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி சனிக்கிழமை முதல் அனைத்து வகையான பிளாஸ்ரிக் பைகளின் பாவனையை முற்றாக தடை செய்ய வேண்டும் எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே அன்றைய தினத்தில் இருந்து வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளும் பின்வருவனவற்றை முற்றாக தவிர்ப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இதற்கமைய எல்லாவகையான பிளாஸ்ரிக் பைகளும், ஒருநாள் பாவித்து விட்டு வீசும் பிளாஸ்ரிக் குவளைகள், தண்ணீர் போத்தல்கள் மற்றும் குளிர்பான போத்தல்கள், ஒருநாள் பாவித்து விட்டு வீசும் பிளாஸ்ரிக் உணவுப் பெட்டிகள், ஒருநாள் பாவித்து விட்டு வீசும் பிளாஸ்ரிக் போசன விரிப்புகள் (Lunch Sheets), ஒருநாள் பாவித்து விட்டு வீசும் பிளாஸ்ரிக் உணவுத் தட்டுக்கள், ஸ்ரைறோபோம் (Styrofoam) என்பதும் பிளாஸ்ரிக் வகையைச் சேர்ந்தது என்பதால் ஒருநாள் பாவித்து விட்டு வீசும் பிளாஸ்ரிக் பொருட்களிற்கான தடையில் ஸ்ரைறோபோமினாலான பொருட்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனவே பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையை விடுத்து துணிப்பைகள், கடதாசிப் பொருட்கள், மட்பாண்ட உற்பத்தி பொருட்கள், பனை மற்றும் வாழை மரங்களின் மூலப் பொருட்களில் இருந்து உற்பத்தி செய்யும் பொருட்களை பயன்படுத்துவதனை மாணவர்களிடையே ஊக்குவிக்கும் வகையில் விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அச்சுற்று நிருபத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# வீ.கே.சசிகலாவுக்கு எதிராக போராட்டம் தொடங்கியது


(சென்னை)

தமிழகத்தின் முதல்வராக வீ.கே.சசிகலா பொறுப்பேற்க போவதை எதிர்த்து முதல்வர் ஓ.பி.எஸ் தொகுதி மககள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணமடைந்து சரியாக 2 மாதம் கழுத்து சசிகலா அடுத்த முதல்வராக பதவியேற்கவுள்ளதாக அறிவிப்பு நேற்று முன்தினம் வெளியாகியுள்ளது.

அந்த அறிவிப்பானது தமிழ் நாட்டு மக்களிடம் மிகப் பெரிய அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.


இந்நிலையில், தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தின் சொந்த தொகுதியான போடிநாயக்கனூரில் உள்ள வெம்பக்கோட்டையில் வசிக்கும் மக்கள் சசிகலா முதல்வராக எதிர்ப்பு தெரிவித்து உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இதில், சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சசிகலாவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக மாணவர்கள் போராட்டம் நடத்தியதை போல சசிகலா முதல்வராக வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்த வேண்டும் என உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

## சீனாவில் தீ 18 பேர் பலி



(பீஜிங்)

சீனாவில் ஷிஜியாங் மாகாணம் தியான்டை பகுதியிலுள்ள ஷ°ஸிங்டாக் என்ற இடத்தில் உள்ள அழகு சாதன நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை திடீரென தீப்பிடித்தது. உடனே அங்கு பணியில் இருந்தவர்களும், வாடிக்கையாளர்களும் கண்ணாடி ஜன்னல்கள் வழியாக வெளியே குதித்து தப்பி ஓடினர். இருந்தும் இந்த தீ விபத்தில் 18 பேர் உடல் கருகி பலியாகினர்.

மேலும் 18 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 2015 ஆம் ஆண்டு தியான்ஜின் நகரில் சாயபட்டறையில் ஏற்பட்ட தீ விபத்தில் 114 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நாணயத் தாள்களை மாற்றுவதில் முறைகேடு

### வங்கி அதிகாரிகள் 158 பேர் இடை நீக்கம்

(டில்லி)

மக்களவையில் உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த நிதியமைச்சர் அருண் ஜேட்லி,

நாட்டில் 500, 1000 ரூபாய் நாணயத்தாள்கள் செல்லாது என்று அறிவிக்கப்பட்ட பிறகு, புதிய நாணயத்தாள்கள் மாற்றிக் கொடுக்க வங்கிகளுக்கு உத்தரவிடப்பட்டது. இதில் கறுப்புப் பணத்தை மாற்றிக் கொடுத்து வங்கி ஊழியர்கள் ஆங்காங்கே முறைகேடுகளில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதுதொடர்பாக பொதுத்துறை வங்கிகளைச் சேர்ந்த 156 மூத்த அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், 41 பேர் வேறு வங்கிகளுக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோல், பொலிஸ் மற்றும் சிபிஐயிடம் 26 குற்றவியல் வழக்குகள் பதிவு செய்துள்ளதாக வங்கிகள் தகவல் தெரிவித்துள்ளன. தனியார் வங்கிகளைப் பொறுத்த வரையில் 11 ஊழியர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது துறை ரீதியான விசாரணை, பொலிஸ் சிபிஐ விசாரணையும் நடைபெற வங்கிகள் நடவடிக்கை எடுத்துள்ளன என்று ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது என அமைச்சர் ஜேட்லி மேலும் தெரிவித்தார். (இ-7)

## போயஸ் கார்டனில் பொலிஸ் பாதுகாப்பு மீண்டும் அதிகரிப்பு

தமிழக முதல்வராக சசிகலா பொறுப்பேற்கவுள்ளதையடுத்து, போயஸ் கார்டனுக்கு பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வசித்து வந்த போயஸ் கார்டன் வீட்டில் 240 பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். ஒரு பொலிஸ உதவி ஆணையர் தலைமையில் இரண்டு ஆய்வாளர்கள், 4 உதவி ஆய்வாளர்கள் மற்றும் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் ஜெயலலிதா மரணம் அடைந்த பின்னர் அவரது தோழி சசிகலா அந்த வீட்டில் வசித்து வருகிறார்.

ஜெயலலிதா மரணத்துக்கு பின்னரும் 240 பொலிஸாரும் போயஸ் கார்டன் இல்லத்தில் பாதுகாப்பு பணியில் இருந்தனர். இதற்கு எதிர்க்கட்சி தலைவர் மு.க. ஸ்டாலின் உட்பட பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அதைத்தொடர்ந்து, பொலிஸ எண்ணிக்கை 5 ஆக குறைக்கப்பட்டது. போயஸ் கார்டன் வீட்டின் முன்பு 5 பொலிஸார் மட்டுமே நின்றனர். ஆனால் பொலிஸாருக்கு பதில் தனியார் காவலாளிகள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். சபாரி உடை அணிந்த தனியார் காவலாளிகள் 70 பேர் பாதுகாப்பு பணியை செய்து வந்தனர்.

இந்நிலையில், அ.தி.மு.கவின் சட்டப்பேரவை கட்சித் தலைவராக சசிகலா நேற்று முன்தினம் தேர்வு செய்யப்பட்டுள்ளார். விரைவில் அவர் தமிழக முதல்வராக பதவி ஏற்கவுள்ளார்.

இதைத்தொடர்ந்து, அவர் வசித்து வரும் போயஸ் கார்டன் வீட்டுக்கு மீண்டும் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மாலையில் 50 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். விரைவில் இந்த எண்ணிக்கை 240 ஆக உயர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

## ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் அகதிக் குழந்தைகள் இணைப்பு

ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ்.தீவிரவாத இயக்கம் வேரூன்றி உள்ளது. அவர்களை அழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட உலக நாடுகள் தீவிரமாக உள்ளன.

எனவே, தங்கள் இயக்கத்தை பலப்படுத்த புதிய ஆட்களை சேர்த்து வருகின்றனர். அதற்காக அகதிகள் முகாம்களில் இருக்கும் குழந்தைகள் கடத்தி வரப்படுகின்றன.

இவர்கள் லெபனான் மற்றும் ஜோர்தான் அகதிகள் முகாம்களில் இருந்து கடத்தப்படுவதாக தெரியவந்துள்ளது. குழந்தைகளை கடத்தி வருபவர்களுக்கு தலா ரூ.1 இலட்சத்து 50 ஆயிரம் வரை வழங்கப்படுகிறது.

மேலும், ஐரோப்பிய நாடுகளில் இருந்து குழந்தைகள் கடத்தப்படுகிறார்கள். இதுவரை 88,300 குழந்தைகள் மாயமாகி இருப்பதாக ஐரோப்பிய யூனியன் பொலிஸ் அமைப்பான 'யூரோபால்' தெரிவித்துள்ளது.

அகதிகள் முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு உணவு வழங்குவது போன்று ஐ.எஸ. தீவிரவாத அமைப்பின் 'ஸ்லீப்பர் செல்' பிரிவினர் ஈடுபட்டு அங்கு இருக்கும் குழந்தைகளை கடத்துவதாக தெரிகிறது. இத்தகவலை தீவிரவாதத்துக்கு எதிரான அமைப்பு வெளியிட்டுள்ளது. (இ-7)

## 80 மாணவர்களின் பெறுபேறுகளை வெளியிட திணைக்களம் தீர்மானம்

(கொழும்பு)

2016 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகளுக்கு தோற்றி இடைநிறுத்தி வைக்கப்பட்ட 80 மாணவர்களின் பெறுபேறுகளை வெளியிட பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தாம் வசிக்கும் மாவட்டத்திற்கு வெளியே சென்று கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை எழுதிய காரணத்திற்காக குறித்த மாணவர்களின் பெறுபேறுகள் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

எனினும் பெறுபேறுகள் வெளியிடப்பட்டாலும் இந்த மாணவர்களுக்கான மாவட்ட வெட்டுப்புள்ளி பரீட்சை எழுதிய மாவட்டத்தின் பட்டியலுக்கு உட்படுத்தப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட் டுள்ளது.

பின்தங்கிய பிரதேசத்தில் இருக்கும் பாடசாலை மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிக்கான சிறப்பு சலுகைகள் வழங்கப்படு கின்றன.

• இந்த சிறப்புச் சலு கையைப் பெறுவதற்கு ஏனைய பகுதிகளில் இருக்கும் மாணவர்கள் பின்தங்கிய பிரதேசங்களுக்கு சென்று பரீட்சைகளை எழுதி பல்கலைக்கழகங்களுக்கு சென்றுவிடுவார்கள்.

இவ்வாறு பரீட்சை எழுதிய 80 மாணவர்கள் பற்றி பரீட்சைகள் திணைக் களத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமையவே பெறுபேறுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என்.ஜே. புஸ்பகுமார தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

## இலங்கை-கனடா உறவுகள் வலுப் பெற்றுள்ளது- ஜவாட்

கனடாவுடனான உறவுகள் வலுப்பெற்றுள்ளதாக கனடாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் அஹமட் ஜவாட் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 69 ஆவது சுதந்திரத் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த நிகழ்வு, கனடாவில் உள்ள இலங்கை தூதரஅலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளை மேலும் இந்த வருடத்தில் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கும் கனடாவிற்கும் இடையிலான உறவுகள் நாளுக்கு நாள் வலுப்பெற்று வருவதாகவும் கனடாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் அஹமட் ஜவாட் தெரிவித்துள்ளார். (இ-7)




யாழ். குடத்தனை கரையூர் றோ.க.த.க பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சிவக்கொழுந்து அகிலதாஸ் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்- கரணவாய் செய்தியாளர்)






யாழ். புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் அதிபர் த. லோகராஜா தலைமையில் இடம்பெற்றது. இதன் போது வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விருந்தினர் பரிசில் வழங்கி கௌரவிப்பதனையும், மாணவர்களது இடைவேளை நிகழ்வையும், கயிறு இழுத்தல் போட்டியில் மாணவர்கள் பங்குபற்றிக் கயிறு இழுப்பதனையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : - புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)






யாழ். நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் நடராசா தேவராஜா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக செல்லத்துரை உதயகுமார் கலந்து கொண்டார். (படங்கள்- மகாலிங்கம்)





யாழ். வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை உபபீடாதிபதி (JNCE) நி.நல்லையா, சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச. திரவியராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்- பொற்பதி செய்தியாளர்)





யாழ். பண்ணாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது...

# தமிழகத்தின் 21 ஆவது முதலமைச்சராக வீ.கே.சசிகலா 9 ஆம் திகதி பதவியேற்பு

(சென்னை)

**அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் சட்டப்பேரவை கட்சித் தலைவராக சசிகலா ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து முதலமைச்சர் பதவியை ஓ.பன்னீர்செல்வம் இராஜினாமா செய்தார். நாளை மறுதினம் 9 ஆம் திகதி ஆளுநர் மாளிகையில் தமிழகத்தின் 21 ஆவது முதலமைச்சராக சசிகலா பதவியேற்கிறார்.**



தமிழகத்தில் கடந்த 2016 இல் நடந்த சட்டப் பேரவை பொதுத்தேர்தலில் அ.தி.மு.க. வெற்றிபெற்று 2 ஆவது முறையாக தொடர்ந்து ஆட்சியைப் பிடித்தது. இதையடுத்து, தமிழக முதல்வராக 6 ஆவது முறையாக ஜெயலலிதா பதவியேற்றார். கடந்த செப்டெம்பர் 22 ஆம் திகதி இரவு திடீர் உடல்நலக்குறைவு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இதையடுத்து, ஜெயலலிதா கவனித்து வந்த உள்துறை உள்ளிட்ட துறைகள் ஓ.பன்னீர்செல்வத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி டிசெம்பர் 5 ஆம் திகதி ஜெயலலிதா காலமானார். இதையடுத்து, அன்று இரவே முதல்வராக ஓ.பன்னீர்செல்வம் பதவியேற்றார். அவருடன் ஜெயலலிதா அமைச்சரவையில் இருந்த அமைச்சர்களும் பதவியேற்றனர்.

பொதுச் செயலாளரான சசிகலா

இதைத் தொடர்ந்து, அ.தி.மு.கவின் பொதுச்செயலாளர் யார் என்ற குழப்பம் ஏற்பட்டது. அப்போது பொதுச் செயலாளராக சசிகலாவை முதல்வர் ஓ.பன்னீர்செல்வமே முன்மொழிந்தார். அதன்பின் டிசெம்பர் 29ஆம் திகதி நடந்த அ.தி.மு.க.பொதுக்குழு, செயற்குழு கூட்டத்தில், சசிகலா ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். அவர் டிசெம்பர் 31 ஆம் திகதி கட்சித் தலைமை அலுவலகத்தில் பொதுச் செயலாளராக பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதற்கிடையே கட்சி, ஆட்சி நிர்வாகங்கள் இரண்டும் ஒருவரிடமே இருக்க வேண்டும். அதனால், முதல்வர் பொறுப்பையும் சசிகலா ஏற்க வேண்டும் என அ.தி.மு.க. மூத்த நிர்வாகிகளும் அமைச்சர்களும் வெளிப்படையாகவே கோரிக்கை விடுத்தனர். ஆனால், சசிகலா தொடர்ந்து அமைதி காத்து வந்தார். பொங்கலுக்கு முன்னதாக அவர் முதல்வராக பதவியேற்பார் என தகவல்கள் வெளியாயின. ஆனால், ஜல்லிக்கட்டு போராட்டம் தீவிரமானதால் அந்த முயற்சி தள்ளிப்போனது.

கடந்த ஜனவரி 23 முதல் பெப்ரவரி 2 ஆம் திகதி வரை சட்டப்பேரவை கூட்டம் நடந்தது. ஜெயலலிதா பிறந்த நாளான பெப்ரவரி 24 ஆம் திகதிக்குள் சசிகலா முதல்வராக பொறுப்பேற்க வாய்ப்பிருப்பதாக கட்சிக் வட்டாரங்கள் தெரிவித்து வந்தன.

இந்நிலையில், பெப்ரவரி 5 ஆம் திகதி அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கூட்டம் நடக்கும் என திடீரென அறிவிக்கப்பட்டது. எம்.எல்.ஏக்களுக்கு தொலைபேசியில் அழைப்பு விடுக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் சட்டப்பேரவை கட்சித் தலைவராக (முதல்வராக) சசிகலா தேர்வு செய்யப்படுவார் என்றும் அவர் உடனடியாக முதல்வர் பதவியை ஏற்பார் என்றும் தகவல்கள் வெளியாகின.

இதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் காலை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் 10 இற்கும் மேற்பட்ட மூத்த அமைச்சர்கள் போயஸ் கார்டன் இல்லத்துக்கு சென்றனர். அங்கு, சசிகலாவுடன் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினர். இதில் மக்களவை துணைத் தலைவர் தம்பிதுரை உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

ஆலோசனை முடிந்ததும் அமைச்சர்கள் அனைவரும் ராயப்பேட்டையில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்துக்கு வந்தனர். முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் 2.10 மணிக்கு வந்தார். 3.10 மணிக்கு சசிகலா வந்தார். அவரை தம்பிதுரை, ஓ.பன்னீர்செல்வம், செங்கோட்டையன் உள்ளிட்டோர் வரவேற்றனர். பின்னர் எம்.எல்.ஏக்கள் கூட்டம் தொடங்கியது.

இதில், அ.தி.மு.க. சட்டப் பேரவை கட்சித் தலைவராக சசிகலாவை தேர்வு செய்யும் தீர்மானத்தை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் முன்மொழிந்தார். இதையடுத்து, சசிகலா ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. கூட்டம் முடிந்ததும் 3.40 மணிக்கு போயஸ் கார்டனுக்கு சசிகலா திரும்பினார்.

சசிகலா சட்டப்பேரவை கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டதை அடுத்து ஓ.பன்னீர்செல்வம் தனது முதல்வர் பதவியை இராஜினாமா செய்தார். அந்தக் கடிதத்தை ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளார். இதைத் தொடர்ந்து தமிழகத்தின் 21 ஆவது முதல்வராக சசிகலா பதவியேற்கவுள்ளார். பதவியேற்பு விழா, வரும் 9 ஆம் திகதி ஆளுநர் மாளிகையில் எளிமையாக நடக்கும் என்றும், இதற்கான ஏற்பாடுகள் தொடங்கப்பட்டு விட்டதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

டில்லியில் ஆளுநர்

அ.தி.மு.க. சட்டப்பேரவை கட்சித் தலைவராக சசிகலா தேர்வு செய்யப்பட்டது குறித்து கோவையில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றிருந்த ஆளுநர் வித்யாசாகர் ராவுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், அவர் நேற்று முன்தினம் இரவு திடீரென கோவையில் இருந்து டில்லி புறப்பட்டுச் சென்றார். அவர் மீண்டும் 7 ஆம் திகதி இரவு சென்னை திரும்புகிறார். அப்போது ஆளுநரை சந்திக்கும் சசிகலா சட்டப்பேரவை கட்சித் தலைவராக தான் தேர்வு செய்யப்பட்டதற்கான கடிதத்தை வழங்கி ஆட்சி அமைக்க உரிமை கோருவார். அதன்பின் ஆளுநர் ஒப்புதல் அளித்ததும் முதல்வராக சசிகலா பொறுப்பேற்பார் என தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

# மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிதான் ஆள வேண்டும்

## ஜெ.தீபா வலியுறுத்து



(சென்னை)

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் ஜெ.தீபா ஜெயலலிதாவின் பிறந்தநாளான எதிர்வரும் 24ஆந் திகதியன்று புதிய கட்சி தொடங்க உள்ளார். இதற்கான பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதால் வாரத்தில் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் தனது ஆதரவாளர்களை சந்தித்து, அவர்களுடைய வாழ்த்துகளை பெற்று வருகிறார்.

அதன்படி ஞாயிற்றுக்கிழமையான நேற்று முன்தினம் ஜெ.தீபாவை சந்திப்பதற்காக சென்னை தியாகராயநகரில் உள்ள அவரது இல்லத்துக்கு காலை முதலே அவருடைய ஆதரவாளர்கள் ஏராளமானோர் குவிந்தனர். ஜெ.தீபா மாலையில் தொண்டர்களை சந்தித்து, வாழ்த்துகளை பெற்றுக்கொண்டார்.

பின்னர் ஆதரவாளர்கள் மத்தியில் ஜெ.தீபா பேசியதாவது,

என்னை நம்பி வந்தவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற உறுதி எனக்கு இருக்கிறது. தமிழக மக்களின் சுதந்திரம் இழந்தது போல் ஒரு சூழல் தற்போது உருவாகி உள்ளது. இதனை நான் வன்மையாக கண்டிக்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிதான் ஆளவேண்டும்.

இதில் மக்களுக்கு எந்த வித மாற்று கருத்தும் இருக்க முடியாது. பொறுத்தது போதும் நல்ல எதிர்காலத்துக்காக நாம் போராடுவோம். நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் வாழ்ந்தவர்கள் ஆட்சி செய்யலாம்.

'புரட்சித்தலைவி' (ஜெயலலிதா) என்ற பெயர் அழிந்து விடாமல் காக்கவேண்டியது நமது கடமை.

உங்களுக்காக நான் தொடர்ந்து பணி செய்வேன். நீங்கள் விரும்பும் குரலை உயர்த்தி உறுதியாக இருங்கள்.

நிச்சயமாக நமக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. ஜெயலலிதாவின் நிழலைக் கூட யாரும் தொட முடியாது. அதற்கு நானும் விடமாட்டேன்.

ஜனநாயகம், மக்களாட்சி மலரவேண்டும் என்பதற்காக நான் துணை நிற்பேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# காளஹஸ்தி கோவிலில் தீ விபத்து

## பலர் காயம்

ஆந்திராவில் உள்ள புகழ் பெற்ற காளஹஸ்தி கோவிலில் ஏற்பட்ட தீ விபத்தில் பலர் காயமடைந்துள்ளனர்.



ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்தின் புகழ்பெற்ற காளஹஸ்தி கோவிலில் கடந்த சனிக்கிழமை யாகம் ஒன்று இடம்பெற்றபோது திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு படையினர், நீண்ட நேரம் போராட்டத்தின் பின்னர் தீயை கட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

எனினும் குறித்த தீ விபத்தில், யாகத்தில் கலந்துகொண்ட பலருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆந்திராவின் புகழ்பெற்ற காளஹஸ்தி கோவிலில் 50 கோடி ரூபாய் செலவில் புதிய கோபுரம் ஒன்று அண்மையில் கட்டி முடிக்கப்பட்டது.

இதையடுத்து நாளை 8 ஆம் திகதி கோவிலில் மகா கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்யப்பட்டதை முன்னிட்டு தினமும் கோவில் யாகசாலையில் சிறப்பு யாக பூஜைகள் நடத்தப்பட்டு வந்த நிலையில், குறித்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ)

# அமெரிக்க ஜனாதிபதிக்கு எதிராக ஜேர்மனியில் பாரிய போராட்டம்





டொனால்ட் ட்ரம்பை எதிர்த்து ஜேர்மனி தலைநகர் பெர்லினில் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதி ஆனவுடன் ஈரான், ஈராக், சிரியா, லிபியா உட்பட 7 இஸ்லாமிய நாட்டு மக்கள் அமெரிக்காவுக்குள் வர தடை விதித்தார்.

மேலும் மெக்ஸிக்கோ மக்கள் அமெரிக்காவுக்கு வருவதை தடுக்கும் நோக்கில் எல்லையில் பெரிய தடுப்பு சுவர் கட்டப்படும் என அறிவித்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஜேர்மனி தலைநகர் பெர்லினில் உள்ள உலக புகழ்பெற்ற நினைவுச்சின்னமான Brandenburg Gate அருகில் மக்கள் போராட்டம் நடத்தினார்கள்.

இந்தப் போராட்டத்தில் ஜேர்மனி, அமெரிக்கா, சிரியா போன்ற நாடுகளை சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டனர். (இ-7)

## நியூயோர்க் நகர பொலிஸார் சீருடையில் கமரா வேண்டும்

### ட்ரம்ப் காலக்கெடு விதிப்பு

(நியூயோர்க்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகர பொலிஸார் பணியில் இருக்கும் போது தங்கள் சீருடையில் கமரா பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என நியூயோர்க் நகர பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக பதவி ஏற்று ட்ரம்ப் பல்வேறு அதிரடி உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார். அவர் பிறப்பிக்கும் உத்தரவிற்கு எதிர்ப்புகள் இருந்தாலும், இவை அனைத்தும் நாட்டின் நன்மைக்காகவே செய்து வருவதாக விளக்கமளித்திருந்தார்.

அதில் ஒரு பகுதியாக நாட்டின் பாதுகாப்புத்துறை மேம்படுத்தப்படும் என்று டிரம்ப் அறிவித்திருந்தார். அதுமட்டுமன்றி உள்நாட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து பொலிஸ நிலையங்களும் மேம்பட்ட தொழிலநுட்பத்திற்கு மாறும்படியும் அவர் கூறியிருந்தார்.

இந்நிலையில் நியூயோர்க் நகரத்தில் உள்ள பொலிஸார் அனைவரும் எதிர்வரும் 2019ஆம் ஆண்டிற்குள் தங்களது சீருடையுடன் இணைந்த கமரா பொருத்திக் கொள்ள ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக நியூயோர்க் நகர நிர்வாகம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

இதற்கு முன்னர் இது போன்ற விதிமுறை நடைமுறையில் இருந்தாலும், இப்போது தான் கட்டாயம் என்று அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் நகர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பொலிஸார் பணியில் இருக்கும் போது சூழ்நிலைக்கு ஏற்ப இந்த கமராக்களை பொலிஸார் இயக்க உத்தரவு அளிக்கப்படும் என்றும், இதில் பதிவு செய்யப்படும் காட்சிகளை அவ்வளவு எளிதில் யாரும் அழித்து விட முடியாது எனவும் கூறப்பட்டுள்ளது. (இ)



## ட்ரம்ப் தொப்பியால் சிறுவன் மீது தாக்கு




அமெரிக்காவின ஜனாதி பதியாக பதவி ஏற்றிருக்கும் டொனால்ட் ட்ரம்ப் சர்ச்சைக் குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இதனால் அமெரிக்க மக்களிடையே வெறுப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் ட்ரம்ப் தொப்பி அணிந்திருந்த 12 வயது கவின் என்ற சிறுவன் சக மாணவர்களால் தாக்கப்பட்டான். அவன் மிஸ்சோரியில் உள்ள பார்க்வே பள்ளியில் படிக்கிறான். அவன் தேர்தல் பிரசாரத்தின் போது ட்ரம்ப் கையெழுத்திட்டு அமெரிக்காவை மீண்டும் பெரியளவில் உயர்த்திடுவோம் என்று எழுதப்பட்ட தொப்பியை அணிந்து பாடசாலை பேருந்தில் சென்றான்.

அப்போது உடன் இருந்த சக மாணவர்கள் அந்த தொப்பிக்கு எதிர்ப்பு தெரிவித் தனர். அதை கழற்றும்படி கூறினர். அதற்கு மறுக்கவே அவனை அடித்து உதைத்தனர். (இ-7)




## ஜனாதிபதியின் உத்தரவுக்கு நீதிமன்றால் முட்டுக் கட்டை

### அமெரிக்காவில் பரபரப்பு

அமெரிக்காவில் சர்ச்சைக்குரிய விசா விவகாரத்தில் நீதிமன்ற தடையை எதிர்த்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் மேல்முறையீடு செய்தது. ஆனால், அதை ஏற்று உடனடியாக தடையை நீக்க மேல்முறையீடு நீதிமன்றம் மறுத்துவிட்டது.

ஈராக், சிரியா, ஈரான், லிபியா, சூடான், சோமாலியா, ஏமன் ஆகிய 7 முஸ்லிம் நாடுகளுக்கு 'விசா' வழங்குவதை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 3 மாதங்களுக்கு நிறுத்தி வைத்து உத்தரவு பிறப்பித்தார். மேலும், அகதிகள் அமெரிக்காவில் நுழைய 4 மாத தடையும், சிரியா அகதிகளுக்கு ஒட்டுமொத்த தடையும் விதிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவுக்கு அமெரிக்கா மட்டுமன்றி சர்வதேச நாடுகளில் கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது. முஸ்லிம் நாடுகளை குறிவைத்து தடை விதித்துள்ள டிரம்புக்கு எதிராக அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடந்தன. வழக்குகளும் போடப்பட்டன. இந்த வழக்கை விசாரித்த சியாட்டில் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஜேம்ஸ் ராபர்ட், ட்ரம்ப் உத்தரவுக்கு நாடு முழுவதும் இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார். இது ஜனாதிபதி டிரம்ப் நிர்வாகத்துக்கு பின்னடைவாக கருதப்பட்டது.

இந்நிலையில், நீதிமன்ற தடை உத்தரவை எதிர்த்து அமெரிக்க அரசின் நீதித்துறை தரப்பில் சான் பிரான்சிஸ்கோ மேல்முறையீடு நீதிமன்றத்தில் மேன் முறையடு செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவின் பாதுகாப்புக்காகத் தான் 'விசா' வழங்க தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே அவசர வழக்காக விசாரித்து தடையை உடனே நீக்க வேண்டும் என மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது அமெரிக்க அரசின் தலைமை சட்டத்தரணி நோயல் பிரான்சிஸ்கோ ஆஜராகி வாதாடினார். அப்போது, "அமெரிக்காவுக்குள் யார் நுழைய வேண்டும், யார் நுழையக் கூடாது என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமே உள்ளது. இதில் நீதிமன்றம் தலையிட முடியாது" என்று வாதிட்டார். ஆனால், இதை நீதிபதி ஏற்கவில்லை. மேலும், மேன்முறையீட்டு மனுவை ஏற்று உடனடியாக தடையை நீக்க மறுத்துவிட்டார்.

மேலும், 'விசா' தடையை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளவர்கள் தங்கள் தரப்பு விவாதத்தை முன்வைக்க வேண்டும் என அவர் உத்தர விட்டார். (இ)

## நீதிமன்றத்துடன் மோதும் அமெரிக்காவின் ஜனாதிபதி

### மக்களையும் தூண்டி விடுகிறார்

அமெரிக்காவில் இனி ஏதாவது விபரீதம் நடந்தால் நீதிமன்ற அமைப்பை சாடுங்கள் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.


அமெரிக்காவின் ஜனாதிபதியான ட்ரம்ப் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு இஸ்லாமியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட 7 முக்கிய நாடுகளின் குடிமக்கள் அமெரிக்காவிற்குள் வருவதற்கு தடை விதித்தார்.

இதனால் அதிர்ச்சியடைந்த உலகமக்கள் பலர் ட்ரம்ப்பிற்கு எதிராக போராட்டம் நடத்தினர். மேலும் ட்ரம்ப்பின் இந்த அதிரடி உத்தரவிற்கு எதிராக நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் ட்ரம்ப்பின் உத்தரவிற்கு எதிராக தீர்ப்பு வழங்கினர். இது ட்ரம்ப்பிற்கு பெரிதும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

இதனால் அவர் நீதிபதியின் இந்த தீர்ப்பினால், மிக ஆபத்தானவர்கள் நாட்டுக்குள் வர வாய்ப்பு இருக்கிறது. இது மிக மோசமான முடிவு என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் ஒரு நீதிபதி நமது நாட்டை அபாயத்தில் தள்ளுவார் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. ஏதாவது விபரீதம் நடந்தால், அவரையும் நீதிமன்ற அமைப்பையும் சாடுங்கள் என்று தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ளார். (இ)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினூடாக பாரதி இல்ல சிறார்களுக்கு புலம்பெயர் உறவான டுபாய் நாட்டைச் சேர்ந்த சுமதி குணராஜசிங்கம் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களை இல்லக் களஞ்சியத்திற்கு அண்மையில் அன்பளிப்பாக வழங்கி வைத்த போது...



அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழக உறுப்பினர்களான அமரர்கள் லஜிதன், திருக்குமரன் ஆகியோரின் 150 ஆவது நினைவு நாளை முன்னிட்டு கழக மைதானத்தில் அண்மையில் இரத்ததான முகாம் நடை பெற்றபோது...

(படம்:- புன்னாலைக் கட்டுவன் செய்தியாளர்)







பொலிகண்டி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் வைரவிழா அண்மையில் யா/பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக செ. உதயகுமார், சிறப்பு விருந்தினராக ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- மகாலிங்கம்)





சந்நிதியான் ஆச்சிரமத்தின் தை மாத ஞானச்சுடர் அண்மையில் வெளியிடப்பட்டது. இம் மலருக்குரிய மதிப்புரையை அதிபர் ஆ.சிவநாதன் வழங்கினார். இதில் சிறப்புப் பிரதியினைப் பெற்றுக் கொண்ட மக்கள் வங்கி உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம்.





யாழ்ப்பாணம் நோத் லங்கா சர்வதேச பல்கலைக்கழகத்தில் கலாநிதி பா.தனபாலனின் செயல் நிலை ஆய்வு நூல் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. நூலின் முதற்பிரதியை யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பிரித்தானிய நாட்டு ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக கல்வியியற்றுறை பேராசிரியர் **Bridget Somekh** பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)





2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று தேசிய ரீதியில் சாதித்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மகேஷ் சேனநாயக்கவினால் அண்மையில் பலாலியில் அமைந்துள்ள பாதுகாப்பு படைகளின் தலைமையக கேட்போர் கூடத்தில் மடிக்கணனி உள்ளிட்ட பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் , பெற்றோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்;- சோபிகா)



# ஜனாதிபதி தேர்தலில் கோத்தபாயவினால் வெற்றி பெற முடியாது

## எஸ்.பி. திஸாநாயக்க தெரிவிப்பு



முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில வெற்றியீட்டமாட்டார் என அமைச்சர் எஸ்பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார். "கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் தோல்வியைத் தழுவுவார், பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்டால் வெற்றியீட்டுவார்.

கூட்டு எதிர்க்கட்சி தனித்து தேர்தலில் போட்டியிடும் என்ற பிரசாரங்களில் உண்மையில்லை. போட்டியிடப் போவதில்லை என்ற காரணத்தினால் மகிந்த ராஜபக்ஷ கூட்டு எதிர்க்கட்சி தனித்து போட்டியிடும் என கூறி வருகின்றார்.

அமைச்சரவை மாற்றத்தின் போது எனக்கு எவ்வித புதிய பதவியும் தேவையில்லை. தற்போது வகிக்கும் பதவி போதுமானது. அமைச்சரவை மாற்றம் தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமரும் தீர்மானித்துள்ளனர். அது குறித்து ஊடகங்களுக்கு தற்போதைக்கு கருத்து வெளியிட முடியாது என எஸ்.பி. திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# பொறுப்புக் கூறல் மந்தம்

## பிரதமர் ரணிலிடம் ஐ.நா.ஆணையர் கவலை

(கொழும்பு)

**பொறுப்புக் கூறல் தொடர்பான விவகாரங்களில், இலங்கை மெதுவாகவே செயற்படுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன் கவலை வெளியிட்டுள்ளார்.**

டாவோசில் கடந்த மாத நடுப்பகுதியில் நடந்த உலக பொருளாதார மாநாட்டில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டிருந்தார்.

இந்த மாநாட்டின் பக்க நிகழ்வாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, ஜெனிவாவில் உள்ள ஐ.நாவுக்கான இலங்கை பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க ஆகியோரும் பங்கேற்ற இந்தச் சந்திப்பின் போது இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்துக் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ஐ.நா.மனித உரிமை ஆணையாளர், நல்லிணக்கப் பொறிமுறைகள் தொடர்பாக, கலந்தாய்வு செயலணியின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களை வரவேற்றுள்ளார். "அதேவேளை, பல்வேறு விடயங்களில், குறிப்பாக பொறுப்புக்கூறல் விடயங்களில் மெதுவான முன்னேற்றங்கள் மாத்திரமே ஏற்பட்டுள்ளமை குறித்த எனது கவலையை வெளியிட்டேன். இதுவும், கரிசனைக்குரிய ஏனைய விவகாரங்களும், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் வரும் மார்ச் மாதம் நான் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில் பிரதிபலிக்கும் என்றும் இலங்கைப் பிரதமருக்குத் தெரிவித்தேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 2020 இல் நாட்டின் தலைமைத்துவத்தை அம்பாந்தோட்டையில் நாம் பெற முடியும்

## அமைச்சர் சஜித் தெரிவிப்பு

எதிர்வரும் 2020ஆம் ஆண்டில் நாட்டின் தலைமைத்துவத்தை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். சூரியவெவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.2020ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் மற்றும் அரச தலைமைத்துவத்தையும் அம்பாந்தோட்டைக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய சாத்தியம் உண்டு என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பிரபல ஜோதிடர் மற்றும் வாஸ்து நிபுணர் வீ.எஸ். இராமலிங்கம் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

எதிர்வரும் 2020ம் ஆண்டில் இலங்கையில் இளைய அரசியல்வாதி ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் என அவர் எதிர்வு கூறியிருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

ஜோதிடர் ராமலிங்கத்தை சந்திக்கச் சென்ற அரசியல்வாதிகள் பலரில் சஜித் பிரேமதாஸவும் ஒருவராக காணப்படுகின்றார்.

இதேவேளை சஜித் பிரேமதாஸவின் தந்தையும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியுமான ரணசிங்க பிரேமதாஸவும் இந்திய ஜோதிடர்களின் ஆலோசனைகளுக்கு தீவிர முக்கியத்துவம் வழங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்கு எதிராக பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க முறைப்பாடு

(கொழும்பு)

சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதியமைச்சர் ரஞ்சன்ராமநாயக்க, இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்கு எதிராகவே இந்த முறைப்பாடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த முறைப்பாட்டை தாக்கல் செய்துள்ளதாக ரஞ்சன் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் 500 கியூப் மணல் அள்ளுவதற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும்,குறித்த பகுதியில் இருந்து 61000 கியூப் மணல் அள்ளப்பட்டுள்ளதாக ரஞ்சன் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதேச செயலாளருடன் ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து,ரஞ்சன் மன்னிப்புக் கோர வேண்டுமெனக் கோரப்பட்டிருந்தது. இருப்பினும் அதற்கு அவர் நேற்று முன்தினம் மறுப்பு வெளியிட்டுள்ளார்.

பிரதேச செயலாளரும் அவருக்கு ஆதரவளித்தவர்களுமே மன்னிப்புக் கோர வேண்டும்.

ஏனெனில் அவர்களே இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

மணல் அகழ்வின்போது மோசடி இடம்பெற்றுள்ளது என்பதை உறுதி செய்வதற்கு ஒரே ஒரு ஆதாரம் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியக அதிகாரியின் பணி நீக்கம் என்பதே என்றும் ரஞ்சன் ராமநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## புரிந்தமாதிரி தலையாட்டலாமா?

சில சமயங்களில் பிறர் சொல்வது நமக்குக் கேட்காது. ஆனால் நாமோ நன்கு கேட்டுப் புரிந்துகொண்டுவிட்ட மாதிரித் தலையாட்டி வைப்போம்.

இது முக்கியமற்ற விடயமாக இருந்து விட்டால் பரவாயில்லை. ஆனால் சில சமயங்களில் மிக முக்கியமான விடயமாக இருந்து நம்மையோ பிறரையோ பாதிக்கக்கூடிய விடயமாக அமைந்து விட்டால் தொலைந்தது.

சிலர் இரண்டு அர்த்தங்களில் சிலவற்றைச் சொல்வார்கள். சிலரோ வெடி வைத்துப் பேசுவார்கள். நமக்கோ புரியவே புரியாது. ஆனால் என்ன அர்த்தத்தில் அதை அப்படிச் சொன்னீர்கள் என்று கேட்க வெட்கம். என்ன நினைப்பார்களோ என்று தயக்கம்.

அன்னிக்கே சொன்னேனேங்க! சரியாகக் கேட்டுக்கலையா? என்று சொன்னவர் விரக்தியின் உச்சிக்குப் போய்க் கத்தும் போது தான் ஏன் தான் அன்று சரிவரக் கேட்டுக் கொள்ளாமல் விட்டோமோ என்று நொந்து கொள்ள வேண்டிவரும்.

ரயில், பஸ் இரைச்சலில், திரையரங்குக் கூச்சலில், திருமண இல்லத்தின் உச்ச இசையில் ஒருவர் எதையாவது பேசிக் கொண்டே இருக்கிறார் என்றால், அவர் என்ன சொல்கிறார் என்பது மட்டுமல்ல, எதைப் பற்றிப் பேசுகிறார் என்பது கூடத் தெரியாத நிலையில், பலர் தலையைத் தலையை ஆட்டிக் கொண்டே இருப்பதைப் பார்த்திருக்கிறேன்.

ஓகோ! காது இவருக்கு ரொம்பக் கூர்மை போலிருக்கிறது என்று என்னங்க பேசினாரு அவரு? என்று கேட்பேன். என்னவோ தொண தொணன்னு அறுத்தாரு. என்ன சொன்னார்னே விளங்கலை. நானும் காதிலேயே வாங்கிக்கலை என்று பதில் வரும்.

இது ஒரு கெட்ட பழக்கம்.

புரியும்படி பேசும்வரை எவரையும் விடக்கூடாது. வேறு சிந்தனையாய் இருந் தேன். திரும்ப ஒரு தடவை சொல்லுங்க என்று தயக்கமின்றிக் கேட்க வேண்டும். அந்த இடம் வரைக்கும் கேட்டது. அதுக்குப் பிறகு சொன்னீங்களே அது மட்டும் சரியாகக் கேட்கலை. என்ன சொன்னீங்க கடைசியா ? என்று கேட்க வேண்டும். விடக் கூடாது.

சொன்னதைத் திரும்ப ஒரு தடவை சுருக்கமாகச் சொல்லுங்க என்று சொல்ல வேண்டும்.

அறியாமை; கேளாமை; வேறு சிந்தனையாக இருத்தல் ஆகியவை தவறே அல்ல.

ஆனால் எல்லாம் புரிந்த மாதிரியும் கேட்டுவிட்ட மாதிரியும் பூம்பூம்மாடு போலத் தலையாட்டிவிட்டு,அப்புறம் நட்டங்களை வலிய விலைக்கு வாங்குவது இருக்கிறதே, அது தவறு. பிறர் பேசும் விடயம் பிடிக்காவிட்டால் தலைப்பை மாற்றுங்கள். நகர்ந்து அமருங்கள். எழுந்து சென்று விடுங்கள். அல்லது அவர் வாயையே மூடும் அடையுங்கள்.

ஆனால் பிறரைப் பேச அனுமதித்தால் அல்லது பிறர் பேசுவதைக் கேட்க வேண்டிய நிர்ப் பந்தம் இருந்தால் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பது உங்களுக்கு நூற்றுக்கு நூறு தெரிந்திருக்க வேண்டும்.

**லேனா தமிழ்வாணன்**



தனது சொந்த பகுதியான பொலநறுவை லக்ஷ உயனவிற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டார். இதன்போது பல பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி, தனது இளமை கால ஞாபகங்களை நினைவுபடுத்திக் கொண்டார். அவர் சிறு வயதில் வாழ்ந்த வீட்டுக்கு சென்று பார்வையிட்டதுடன், அங்குள்ள மக்களிடம் நட்பு ரீதியாக உரையாடினார். அந்தப் பகுதியிலுள்ள சில்லறைக் கடைக்கு சென்று பொருட்களின் விலைகளைப் பற்றிக் கேட்டறிந்த ஜனாதிபதி அங்கிருந்த மக்களுடனும் உரையாடினார். தனது சொந்தக் கிராமத்தில் சாதாரண மனிதனாக உலாவிய ஜனாதிபதி, லக்ஷ உயன புகையிரத நிலையத்திற்கும் சென்றார்.

# நீதிமன்றில் ஆஜராகுமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவு

(கொழும்பு)

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் சட்டமா அதிபர் உட்பட சில தரப்பினரை எதிர்வரும் 13 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச பிணை கோரி தாக்கல் செய்திருந்த மனு மீதான வாதங்களை முன்வைப்பதற்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ.ஏ. களுவாராச்சி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 40 வாகனங்களை தவறாக பயன்படுத்தியதன் மூலம் அரசுக்கு 9 கோடி ரூபா இழப்பை ஏற்படுத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் வீரவன்ச விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜயரத்னவின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தன்னை பிணையில் விடுவிக்க உத்தரவிடுமாறு கோரி வீரவன்ச மேல் நீதிமன்றத்தில் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் போது உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்ற போதிலும் வீரவன்ச சம்பந்தமாக சான்றிதழ் தாக்கல் செய்யப்படாமல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வீரவன்சவின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் வாதங்களை முன்வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தமிழ்க் கூட்டமைப்பிற்கு அமைச்சர் மனோ அழைப்பு

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பான தனது யோசனைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை எவ்வித பதிலையும் வழங்கவில்லை என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தமிழ் முற்போக்குக் கூட்டணியும் நாடாளுமன்றத்தில் கலந்துரையாடி "தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றியம்" என்ற அமைப்பை அமைக்க வேண்டுமெனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும், இந்த யோசனையை தாம் கூட்டமைப்பு உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சிவஞானம் சிறிதரன், சிவசக்தி ஆனந்தன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரிடம் ஒரு மாதத்திற்கு முன்பே முன்வைத்ததாகவும், எனினும் இதுவரை இது தொடர்பில் கூட்டமைப்பிடமிருந்து எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை எனவும் அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பை உருவாக்குவதன் மூலம், தமிழ் மக்களின் பொதுவான பிரச்சினைகள் தொடர்பில் அரச, எதிரணி சிங்கள கட்சிகளு ன் பேச்சுவார்த்தை நடத்த முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் தீர்வு தொடர்பில் ஒவ்வொரு கட்சிக்கும் வெவ்வேறு நிலைப்பாடுகள் உள்ளதாகவும், எனினும் "தமது யோசனைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாரா, என எவராவது கேட்டு சொல்லுங்கள் எனவும் அவர் பேஸ்புக் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# தகவல் அறியும் உரிமைச் சட்டம்; அதிகாரிகளுக்கு தெளிவில்லை

(கொழும்பு)

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்தி காணாமற் போன தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறிய மட்டக்களப்பிலுள்ள பெண்கள் குழுவொன்று நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசாங்க அலுவலகங்கள் முறைப்பாடுகள் செய்தும், எண்ணற்ற ஆணைக் குழுவில் வாக்குமூலங்களை கொடுத்தும் எந்தவொரு பயனும் கிட்டாத நிலையில், புதிதாக அமுல்படுத்தப்பட்டுள்ள சட்டத்தை பயன்படுத்த மக்கள் தீர்மானித்துள்ளனர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, கடந்த 3 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்த சட்டம் அமுலுக்கு வந்த பின்னர் மாவட்ட செயலகம், மாகாண மற்றும் மாவட்ட தலைமை அலுவலகங்கள், மனித உரிமைகள் ஆணைக்குழு, சிறைச்சாலைகள் திணைக்களம் ஆகியவற்றில் தமது உறவுகள் தொடர்பான விபரங்களை கோரி, 15 பெண்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர்.

எனினும் இந்த சட்டம் குறித்து பெரும்பாலான அரச அதிகாரிகளுக்கு தெளிவற்ற நிலையே காணப்படுவதாக முறைப்பாடு செய்த ஏ.அமல நாயகி என்ற பெண் கூறியுள்ளார்.

இதேவேளை தகவல் அறியும் உரிமைச் சட்டம் நாட்டிற்கு புதிதான ஒன்றெனவும் ஒரே தடவையில் 100 வீதம் அதனை அமுல்படுத்த முடியாது எனவும் வெகுஜன ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார். (இ-7)

# நிதிச் சுமையை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை

## நிதியமைச்சர் ரவி தகவல்

(கொழும்பு)

இலங்கையின் கடன் சுமையை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

முன்னைய அரசாங்கத்தின் செயற்பாடுகளால் தேவையற்ற நிதிச் சுமையை தாங்க வேண்டியுள்ளதாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கண்டி அஸ்கிரி பீடத்தின் மகா நாயக்கர் வரக்காகொட ஸ்ரீஞானரத்ன தேரர் மற்றும் மல்வத்துபீட மகா நாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் ஆகியோரை நிதியமைச்சர் நேற்று முன்தினம் சந்தித்தார்.

அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் மக்களுக்கான நிவாரணம் வழங்கியமை குறித்து மகா நாயக்கர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

அரிசி விலையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பால் நெருக்கடி நிலை உருவாக்கியுள்ளதை ஏற்றுக்கொண்ட நிதியமைச்சர், அதற்கு தீர்வொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் செயற்பட்டுவருவதாக சுட்டிக்காட்டியுள்ளார். அரசாங்கம் சலுகைகளை வழங்கியுள்ள போதிலும் அதன் நன்மைகளை மக்கள் பெற்றுக்கொள்ளவில்லை என நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார்.



அரசாங்கத்தின் சலுகைகளை மக்களுக்கு வழங்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

# தேங்காய் விலை இரு மாதங்களில் குறைந்து விடும்

தேங்காய் விலை அடுத்து வரும் இரண்டு மாதங்களில் குறையும் என்று தெங்கு அபிவிருத்தி சபையின் தலைவர் கபில் யஹாந்தாவல தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக தேங்காயின் விலை அதிகரித்தது.

இறக்குமதி செய்யப்படும் பாம்ஒயில் மீது விதிக்கப்பட்டுள்ள வரித்தொகையை குறைப்பதற்கு அமைச்சர் நவீன் திசாநாயக்க நடவடிக்கை எடுத்துள்ளார். இதன் ஊடாக விலையை கட்டுப்படுத்த முடியும் என்று யஹாந்தவல நம்பிக்கை வெளியிட்டார்.

நாட்டின் தெங்கு உற்பத்தியில் 40 வீதமான உற்பத்தி வீண்விரயம் செய்யப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# சு.கவின் மின்னேரியா அமைப்பாளர் ராஜினாமா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மின்னேரியா அமைப்பாளர் பதவியை, முன்னாள் பிரதியமைச்சர் சந்திரசிறி சூரியாராச்சி, இராஜினாமா செய்துள்ளார்.

தனது தனிப்பட்ட காரணங்களுக்காகவே பதவியை இராஜினாமா செய்துள்ளதாகத் தெரிவித்த அவர், கடமைக் காலத்தில் தனக்கு ஆதரவு வழங்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்குத் தனது நன்றிகளையும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சந்திப்பு திகதியில் மாற்றம்

எதிர்வரும் வெள்ளிக் கிழமை நடைபெறவிருந்த பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கும் பொது மக்களுக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் வியாழக் கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் இச்சந்திப்பு நடைபெற்று வந்ததாகவும் எனினும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை நவம் போயா (பௌர்ணமி) தின விடுமுறையாகையினால் வியாழக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் மேலும் அறிவித்துள்ளது. (இ-7)

# நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு வடமாகாண முதல்வர் முட்டுக்கட்டை

## டிலான் பெரேரா கூறுகிறார்

(கொழும்பு)

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல முயற்சிகளை முன்னெடுத்துள்ள போதும் இவற்றுக்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் முட்டுக்கட்டை போடும் செயற்பாடுகளை முன்னெடுப்பதாக இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

வடக்கு முதலமைச்சருக்கும் தயாசிறி ஜயசேகரவுக்கும் இடையில் ஏற்பட்ட முன்னுக்குப் பின் முரணான கருத்துக்கள் தொடர்பில் பேசும் போதே இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு முதலமைச்சரிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றோம். அதாவது தெற்கிலிருக்கும் இனவாதிகளை ஊக்கப்படுத்தும் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு நிறுத்தாவிடின் அதிகாரப்பகிர்வுக்கு நாம் கொடுக்கும் ஆதரவையும் நிறுத்திக்கொள்ள வேண்டி வரும் என தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவையும் கோத்தபாய ராஜபக்ஷவையும் மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவருவதற்காகவா வடக்கு முதல்வர் இவ்வாறு செயற்படுகின்றார் என்ற பகிரங்க கேள்வியை முன்வைப்பதாகவும் தெரிவித்தார்.



விக்னேஸ்வரனின் செயற்பாடுகள் இதை நோக்கமாக கொண்டதாகவே காணப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## பிரான்ஸில் திட்டமிடப்பட்டதா? சுமந்திரன் படுகொலை சதி

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனை படுகொலை செய்வதற்கான சதித்திட்டம் பிரான்ஸில் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பிலான விசாரணைகளின் போது இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த படுகொலை சதித்திட்டம் புலனாய்வு அமைப்புகளினால் முறியடிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்த படுகொலை சதித்திட்டத்தின் பின்னணியில் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த படுகொலை சதித் திட்டம் தொடர்பில் முன்னாள் போராளிகள் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், குறித்த அனைவரும் பிரான்ஸில் இருக்கும் முன்னாள் போராளி ஒருவரின் கீழ் செயற்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இது குறித்த விசாரணை நடத்தப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், நாட்டில் உடனடி தீவிரவாத அச்சுறுத்தல் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பாதுகாப்பு தரப்பினர் செயற்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## மின்சார பாவனையாளர்களுக்கு விசேட சலுகை!

இலங்கை மின்சார சபை, பாவனையாளர்களுக்கு இலவசமாக எல்.ஈ.டி மின் குமிழ்களை வழங்கவுள்ளது.

60 அலகுகளுக்கு குறைவாக மின்சாரத்தை மாதாந்தம் பயன்படுத்துவோருக்கு இவ்வாறு எல்.ஈ.டி. மின்குமிழ்கள் வழங்கப்படவுள்ளன.

இவ்வாறு வழங்கப்படும் மின் குமிழ்களுக்காக பாவனையாளர்களிடமிருந்து மாதாந்த கட்டணத்தின் ஊடாக பணம் அறவீடு செய்யப்படாது என மின்வலு எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

மின்குமிழ்களை பயன்படுத்துவதனால் மாதாந்தம் சேமிக்கப்படும் மின்சாரத்தைக் கொண்டு மின்குமிழ்களுக்கான செலவு ஈடு செய்யப்படும் என அவர் தெரிவித்தார்.

மின்சார சபையினால் வழங்கப்படவுள்ள எல்.ஈ.டி மின் குமிழ்களுக்கு மூன்றாண்டுகள் உத்தரவாதம் வழங்கப்படவுள்ளது.

வரட்சியான காலநிலையின் போதும் மின்சாரத்தை தொடர்ச்சியாக மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மேலும் உறுதியளித்துள்ளார். (இ-7)

## ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்திலேயே திருட்டு தோற்றம் பெற்றது-சந்திரிகா

கடந்த ஆட்சிக்காலத்தை ஒப்பிட்டு பார்க்கும் போது தற்போது பத்தில் ஒரு வீதமே திருட்டுக்கள் நடைபெறுகின்றன. கடந்த ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதியிடமிருந்தே திருட்டு தோற்றம் பெற்றிருந்தது. திருட்டு வகைகளின் மொத்தமும் அரங்கேறியது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்திலேயாகும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்தார்

அத்தனகல்லயில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பெணகள் சபையின் கூட்டத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு



தெரிவித்துள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 979

Search for people, places and things — Nagendram Home

சிந்து




அனித்தா





புவிதா




கார்த்திநாதன்




சுபாங்கி




நந்தினி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதிகோரும் மக்களின் அணிதிரள்வே "எழுக தமிழ்"

## வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் இனத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கோரிய மக்களின் அணிதிரள்வே எழுக தமிழ் என வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எழுக தமிழை கட்சி அரசியல் ரீதியில் அல்லாமல் மக்களின் அவலங்களை வெளிப்படுத்துதல் என்ற கோணத்திலேயே அணுகி செயற்பட வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம்.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் அவர்களுக்கு இயல்பு வாழ்க்கைக்கான அடிப்படைகள் இன்றும் ஏற்படுத்தப்படாமல் உள்ளன. ஓர் இனம் தமது சொந்த நாட்டிலேயே இன ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகின்றமை, போர் நடைபெற்ற போதும் இறுதிப் போரின் போதும் அதற்குப் பின்னரும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிட்டாமை போன்றன எமக்கு அவநம்பிக்கையே தருகின்றன. இன்றும் நீதிக்குப் புறம்பான ஆக்கிரமிப்புக்களுக்கு நாம் உள்ளாகின்றோம்.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் சில முன்னேற்றங்கள் நடைபெற்றுள்ளன. எனினும் அவை தமிழர்கள் எதிர் கொண்டிருக்கும் நிலைமைகளுக்கான போதுமான பரிகாரங்களாக அமையவில்லை. இவ்வாறான ஓர் சூழ்நிலை யில் எமது மக்களின் அவலத்திற்கும் இனப்பிரச்சினைக்கும் இதயசுத்தியுடனான நிரந்தரமான தீர்வு வேண்டும். இந்த அபிலாசையை வலியுறுத்தியே எம் மக்கள் வீதிக்கு இறங்குகின்றனர். எழுக தமிழ் தொடர்பாக தமிழ்த் தேசியத்தில் வாதப் பிரதிவாதங்கள் இருக்கின் றன. எல்லோருக்கும் பலதரப்பட்டவாறு சிந்திப்பதற்கான சுதந்திரமும் மாற்றுக்கருத்திற்கான சுதந்திரமும் இருக்கின்றது.

எனினும் எழுக தமிழ் குறித்து எதிரான விமர்சனங்களை முன்வைப்போர் இனப் பிரச்சினைத் தீர்வில் மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட ஏமாற்றுத் தனங்களை சீர்தூக்கிப் பார்த்துவிட்டு அபிப்பிராயம் தெரிவிக்கவேண்டியுள்ளது.

எழுக தமிழ் வாயிலான மக்கள் எழுச்சி என்பது நீதி கோரிய எழுச்சியே ஆகும். இனத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கோரிய மக்களின் திரள்வு ஆகும்.

அவ்வாறு இருக்கையில், நீதிவேண்டிய நகர்வு நல்லிணக்கத்தினைப் பாதிப்பதற்கு என தெரிவித்தால் நாம் அடைய நினைக்கின்ற நல்லிணக்கம் நீதிக்கு அப்பாற்பட்ட அணுகுமுறையா என்ற கேள்வி எழுகின்றது. நீதி நல்லிணக்கத்திற்கான அடிப்படையாக அமைய வேண்டும்.

எனவே கிழக்கில் நடைபெறவுள்ள எழுக தமிழுக்கு நாம் அணி திரள்வதில் தடங்கல்கள் இல்லை.

இப் பேரணி கொண்டுள்ள அபிலாசையினையும் கொள்கையினையுமே தமிழ்த் தேசியக்கூட்டமைப் பின் கடந்த நாடாளுமன்ற தேர்தல் விஞ்ஞாபனமும் கொண்டிருந்தது.

எனவே இதனை கூட்டமைப்பிற்கு முரணானது என குழம்ப வேண்டிய அவசியமும் கிடையாது.

அதேவேளை கூட்டமைப்பின் ஒற்றுமையை சீர்குலைப்பதற்கான முயற்சியாகவும் யாரும் இதனை பயன்படுத்தக்கூடாது. இவ்விடயங்களின் அடிப்படையில் நாம் எமது ஆதரவை வழங்குகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# சுசில் - கோத்தபாய மந்திராலோசனை

(கொழும்பு)

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவுக்கும் இடையில் அமெரிக்காவில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஐ.நா.மனித உரிமை பேரவையின் அமர்வு நடைபெறவுள்ள நிலையில், அது தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக அமை



ச்சர் சுசில் பிரேமஜயந்த அமெரிக்கா சென்றுள்ளார்.

இதன்போது கோத்தபாயவுடன் நேற்று முன்தினம் சந்திப்பொன்றை மேற்கொண்டதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.



சுசில் மற்றும் கோத்தபாயவின் சந்திப்பிற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய தகவல் ஒன்று அடிப்படையாக கொண்டுள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.

மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு மற்றும் கலப்பு நீதிமன்றம் தொடர்பில் கோத்தபாய அமைச்சரிடம் கேட்டுள்ளார்.

அத்துடன் இந்த சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைமை, எதிர்கால அரசியல் தொடர்பிலான ஜனாதிபதியின் நிலைப்பாடு தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட் டுள்ளது.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நாளை மறுதினம் 9ஆம் திகதி அமெரிக்காவிலிருந்து இலங்கை திரும்பவுள்ளமை குறிப்பிடத்தக் கது. (இ-7)

# கொழும்பில் மருத்துவ பீட மாணவர் மீது தாக்குதல்


(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் மருத்துவபீட மாணவர்கள் மேற்கொண்ட போராட்டத்தில் மாணவர்கள் பொலிஸாரினால் தாக்கப்பட்டதை கண்டித்து நேற்று பல பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

ராகம மருத்துவ பீட மாணவர்கள், ராகம வைத்திய சாலைக்கு முன்னாலும், பேராதனை மருத்துவ பீட மாணவர்கள் கலஹா சந்தியிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், அதில் அம் மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை, கொழும்பு மருத்துவ பீட மாணவர்கள் அந்த மருத்துவ பீடத்திற்கு அருகில் இருந்து பேரணியாக லிப்டன் சுற்றுவட்டம் வரை சென்று போராட்டத்தில் ஈடுபட்டனர். (இ-7)

## பல பிரதேசங்களில் ஆர்ப்பாட்டம்



# போலி வாகன அனுமதிப்பத்திரம் வைத்திருந்த ஐவர் கைதாகினர்

(கொழும்பு)

மினுவாங்கொட பகுதியில் போலி வாகன அனுமதிப்பத்திரம் வைத்திருந்த ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போதே குறித்த ஐவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐவரும் பஹலகம, மாபொல ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# குற்றச் செயல்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதம் நாட்டினுள் குற்றச்செயல்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்திருப்பதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் குற்றத் தடுப்பு பணியகம் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கு அனுப்பிய அறிக்கையில் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டின் டிசெம்பர் மாதம் நாட்டினுள் குற்றச் செயல்கள் ஓரளவுக்கு குறைந்திருந்த நிலையில், புத்தாண்டு பிறப்பின் பின்னர் ஜனவரியில் சடுதியாக குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன.

கடந்த 2016ம் ஆண்டின் ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் ஜனவரி மாதம் குற்றச் செயல்கள் குறைந்து காணப்படுவதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் நுகேகொடை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிலேயே ஆகக் கூடுதலான குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (இ-7)

# போதைப்பொருள் விவகாரம்

# நோர்வே நாட்டவர் தொடர்பில் இலங்கையில் தீவிர விசாரணை

(கொழும்பு)

பாரிய அளவிலான சர்வதேச போதைப்பொருள் வர்த்தகராக கருதப்படுகின்ற நோர்வே நாட்டவர் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜர்மண்ட் வெலண்ட் என்பவர் தொடர்பில் இலங்கை பொலிஸார் தீவிர விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

அவர் அண்மையில் மாலைதீவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நபர் ஹஷிஸ் என்ற போதைப்பொருளை பாரிய அளவில் விற்பனை செய்யும் நபராக கருதப்படுகின்றார். இது தொடர்பில் தாங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாக போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தற்போது வரையில் தீவிர விசாரணை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எப்படியிருப்பினும் இது வரையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கமைய அவர் இலங்கைக்கு வந்துள்ளதற்கான எந்தவொரு தகவலும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இது தொடர்பில் சார்க் நாடுகளில் போதைப் பொருளை தடுக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள பிரிவிடம் அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

# பொது வேட்பாளர் தரப்பிடம் பணத்தை பெற்ற ஜே.வி.பி

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி கடந்த தேர்தல்களின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான பொது வேட்பாளர் தரப்பில் இருந்து பெருந்தொகையான பணத்தை பெற்றுக்கொண்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் சத்துர சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

வாராந்த சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்க, விஜித ஹேரத், ஆகியோருடன் நான் நேரடியான கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டேன்.

அவர்கள் என்னுடன் மாத்திரம் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடவில்லை. அரசாங்கத்தில் தற்போதுள்ள மோசடியான அமைச்சர்களுடனும் இவர்கள் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டனர்.

டை கோட் அணிந்தவர்கள் பொதுத் தேர்தலில் பணத்தை அனுப்பிய போது நாங்கள் அவற்றை திருப்பி அனுப்பினோம் அவர்களுடனும் இவர்கள் கொடுக்கல் வாங்கலை மேற்கொண்டது எமக்கும் வெட்கத்தை ஏற்படுத்தியது.

அது மாத்திரமல்ல அவர்களின் பணத்தில்தான் இவர்கள் தற்போதும் இயங்கி வருகின்றனர் என சத்துர சேனாரட்ன விமர்சித்துள்ளார்.

எது எப்படி இருந்த போதும மக்கள் விடுதலை முன்னணியினர் இந்த குற்றச்சாட்டை ஏற்கனவே மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சீனாவின் பட்டுப்பாதை திட்டத்தில் வலுக்கும் மனக்கசப்பும் எதிர்ப்பும்



கேந்திர முக்கியத்துவம் மிக்க அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை மேலும் விருத்தி செய்தல் மற்றும் இதற்கருகில் பாரியதொரு கைத்தொழில்வலயம்ஒன்றை அமைப்பதற்கான உடன்படிக்கை ஒன்றில் கடந்த ஆண்டின் இறுதியில் சீனா கைச்சாத்திட்டது.

ஆசியாவிற்கு ஊடாக சீனா தனது பட்டுப் பாதைத் திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கான ஒரு பகுதியாகவே இந்த உடன்படிகையில் கைச்சாத்திட்டது.

இந்த உடன்படிக்கையானது 20 மில்லியன் மக்களைக் கொண்ட இலங்கைத் தீவினால் வரவேற்கப்படுகிறது. நாட்டின் கடன்சுமையைக் குறைப்பதற்கு இந்த நாட்டு மக்கள் முயற்சிக்கும் இந்த வேளையில், சீனாவானது தனது ஒரு அணை ஒரு பாதை என்கின்ற தனது திட்டத்திற்குள் இலங்கையையும் உள்ளடக்கியுள்ளதானது நாட்டின் பொருளாதாரத்திற்கு வலுச்சேர்ப்பதாகவே கொழும்பிலுள்ள அதிகாரிகள் தெரிவித்தனர்.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் விமான நிலையத்தை அமைப்பதற்கு சீனாவால் இதுவரை 2 பில்லியன்டொலர் செலவிடப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் தனது பிரசன்னத்தை தக்கவைத்துக் கொள்வதிலும் தனது பட்டுப் பாதைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலும் சீனா தற்போது எதிர்வுகூற முடியாத பல்வேறு புதிய சவால்களைச் சந்தித்து வருகிறது.

தென்னிலங்கையில் தொழிற்பேட்டை வலயம் திறந்து வைப்பதை எதிர்த்து கடந்த மாதம் பல நூறு வரையான இலங்கை மக்கள் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டனர். தமது நிலங்களை விட்டு வெளியேறமாட்டோம் என்பதில் இந்த மக்கள் உறுதியாக இருந்த போதே இவ்வாறான கைகலப்புச் சம்பவம் இடம்பெற்றது. இலங்கையில் மேற்கொள்ளப்படும் சீனாவின் முதலீட்டை எதிர்த்து வன்முறைச் சம்பவம் இடம்பெற்றமை இதுவே முதற்தடவையாகும்.

சீனாவிடம் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை வழங்கும் இலங்கையின் தீர்மானத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே தலைமை தாங்குகிறார். இலங்கையில் 2005-2015 வரையான காலப்பகுதியில் சீனா தனது முதலீடுகளை அதிகளவில் மேற்கொள்வதற்கு அனுமதியளித்தவரும் மகிந்த ராஜபக்ஷ என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கதே.

கடந்த மாதம் இடம்பெற்ற மோதலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸார்மீது கற்களை வீசிய அதே வேளையில் பொலிஸார் இந்த வன்முறையைத் தடுப்பதற்காக ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகை மற்றும் தண்ணீர்ப் பீரங்கித் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். அதாவது சீனாவானது அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்கு அருகில் கைத்தொழில் வலயம் ஒன்றை அமைத்தால் தாம் தமது சொந்த இடங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டுவிடுவோமோ என இந்த மக்கள் அச்சம் கொள்கின்றனர்.

இரு நாடுகளுக்கும்நன்மையளிக்கக் கூடிய நடவடிக்கைகளிலேயே சீனா ஈடுபடுவதாக சீன வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. இலங்கையில் முதலீடு செய்வது தொடர்பாகக் கருத்துரைக்குமாறு கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்திடம் வினவியபோது இது தொடர்பில் எவ்வித பதிலும் அளிக்கப்படவில்லை.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் சீனாவின் ஒரு அணைத் திட்டத்தை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட முதலாவது சமிக்ஞையல்ல. லாவோஸ் மற்றும் தாய்லாந்தின் ஊடாக சீனாவிலிருந்து தொடரூந்துப் பாதைகளை அமைப்பதற்கான சீனாவின் திட்டத்திற்கும் எதிர்ப்புக் காண்பிக்கப்பட்டது. சீனாவின் கடுமையான நிபந்தனைகள் மற்றும் சாதகமற்ற நிதி வழங்கல் போன்றனவே இத்திட்டத்தை எதிர்த்தமைக்கான காரணமாகும்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் வரையப்பட்ட அம்பாந்தோட்டை கொள்கலன் தாங்கித் திட்டமானது சீனாவின் துறைமுகப் பொறியியல் நிறுவனத்தாலும் சீன அரசிற்குச் சொந்தமான Merchants Port Holdings நிறுவனத்தாலும் 40 ஆண்டுகளுக்கு செயற்படுத்தப்படும் என்றே குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கையின் துறைமுக அதிகாரசபையானது அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் ஏனைய கொள்கலன் தாங்கிகளையும் 6000 ஏக்கர் கைத்தொழில் வலயத்தையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் என்றே ஆரம்பத்தில் எழுதப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் 80 சதவீதத்தை சீனாவின் Merchants Port Holdings நிறுவனத்திற்கு 1.12 பில்லியன் டொலர் பணத்தில் 99 ஆண்டுகாலக் குத்தகைக்கு வழங்குவதெனவும் தற்போதைய அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அதீத கடன் சுமையே ஜனாதிபதி இவ்வாறானதொரு தீர்மானத்தை எட்டவேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு உட்பட்டதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். 1.5 பில்லியன் டொலர் நிதியை இலங்கைக்குக் கடனாக வழங்குவதாக கடந்த ஆண்டு அனைத்துலக நாணய நிதியம் உடன்பட்டது.

'சீனாவிற்கு 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்குவதென்பது சீனா எமது துறைமுகம் மீதான இறையாண்மை உரிமையை அனுபவிப்பதற்கு வழிகோலுகிறது. சீனாவுடனோ அல்லது ஏனைய வெளிநாட்டு முதலீட்டாளர்களுடனோ இது தொடர்பில் முரண்படவில்லை. ஆனால் இலங்கைக்கு மிகச் சிறந்ததைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான பிரச்சினையே இதுவாகும்' என மகிந்த ராஜபக்ஷ தனது நேர்காணல் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்கு அருகிலுள்ள 15,000 ஏக்கர் நிலத்தில் கைத்தொழில் வலயத்தை அமைப்பதற்கு சீனாவின் Merchants Port Holdings நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கவுள்ளதாகவும் இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. இதுவே உள்நாட்டு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்குக் காரணமாகும்.

"எமது நிறுவனங்கள் சந்தைப்படுத்தல் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இருதரப்புக்களின் சுயாதீன உறுதிப்பாடு, சமத்துவம் மற்றும் பரஸ்பர மதிப்பு போன்றவற்றை மதித்து இலங்கையுடன் பேச்சுக்களையும் ஆலோசனைகளையும் மேற்கொண்டு வருகிறது' என சீன வெளியுறவுத்துறை பெண் பேச்சாளர் குவா சுன்சிங்க் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் மத்தல ராஜபக்ஷ விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு சீனாவால் 1.7 பில்லியன் டொலர் நிதி செலவிடப்பட்டுள்ளது. ஆனால் இவ்விரு திட்டங்களும் எதிர்பார்த்தளவு பயனை வழங்கவில்லை. இவ்விரு திட்டங்களும் நிறைவு செய்யப்பட்டு ஐந்து ஆண்டுகள் கடந்த நிலையில் அம்பாந்தோட்டைத் துறைமுகப் பராமரிப்பிற்கு கிட்டத்தட்ட 230 மில்லியன் டொலர் நிதி செலவிடப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

'எல்லாம் சரியாக நடந்தால்' அடுத்த மூன்று தொடக்கம் ஐந்து ஆண்டுகளுக்கு சீனாவால் அம்பாந்தோட்டைத் திட்டத்திற்கு 5 பில்லியன் வரை முதலீடு செய்யப்படும் எனவும் இதன்மூலம் 100,000 வரையான தொழில்வாய்ப்புக்கள் கிடைக்கும் எனவும் இலங்கைக்கான சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் தொழிற்பேட்டை வலயத்தை அமைப்பதற்காக காடுகள் துப்புரவு செய்யப்பட்டு அதற்கான அடிக்கல் நாட்டப்பட்ட இடத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆக்கிரமிக்காது தடுப்பதற்காக கடந்த வாரம் அதற்கருகில் பொலிஸார் ஒருவர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தார்.

'நாங்கள் இத்திட்டத்தை முற்றிலும் எதிர்க்கிறோம். எமது நிலத்தை சீனர்களுக்கு வழங்க நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் இந்த இடத்தை விட்டு வெளியேறமாட்டோம்' என அம்பாந்தோட்டையில் கைததொழில் வலயத்தை அமைப்பதற்காக அரசாங்கத்தால் அளவிடப்பட்ட பகுதியில் காணியைக் கொண்டுள்ள விவசாயியான உபுல் தம்மிக்க தெரிவித்தார்.

சீனாவிற்கு 15000 ஏக்கர் நிலத்தை வழங்க வேண்டியதன் தேவை தொடர்பாக மகிந்த ராஜபக்ஷ கேள்வியெழுப்பியுள்ளார். இந்த நாட்டிலுள்ள ஏனைய பொருளாதார வலயங்களின் மூன்று மடங்கு அதிகமான ஏக்கர் பரப்பளவில் தற்போது இந்த கைத்தொழில் வலயம் உருவாக்கப்பட வேண்டியதன் தேவை என்ன என மகிந்த ராஜபக்ஷ வினவியுள்ளார்.



இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது இடம்பெற்ற பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இந்த நாட்டின் மீது குற்றம் சுமத்தப்பட்ட வேளையில் மேற்குலகானது இலங்கையைப் புறக்கணித்திருந்தது. இதன் போது சீனாவுடன் மகிந்த ராஜபக்ஷ பல்வேறு திட்டங்கள் தொடர்பாக உடன்படிக்கை மேற்கொண்டார். இதில் அம்பாந்தோட்டை மற்றும் அதற்கு அருகிலுள்ள விமான நிலையம் போன்றனவும் உள்ளடங்குகின்றன. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட போது 1.4 பில்லியன் டொலர் பெறுமதியான கொழும்பு துறைமுக நகரத் திட்டம் உட்பட சீனாவின் பல்வேறு திட்டங்களை இடைமறித்திருந்தார்.

இது சீனாவிற்கு குழப்பத்தை உண்டு பண்ணியது. இந்நிலையில் சீனா இலங்கை மீது தனது கடனைத் திருப்பிச் செலுத்துமாறு அழுத்தம் கொடுத்தது. 'இலங்கையின புதிய அரசாங்கமானது அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் 80 சதவீதத்தை சீனாவிற்கு குத்தகைக்கு வழங்குவது எனத் தீர்மானிக்கும் வரை இலங்கை மீது சீனா உண்மையில் கோபம் கொண்டிருந்தது' என பெயர் வெளியிட விரும்பாத ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் சமரசம் எட்டப்பட்டதா என கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்திடம் வினவிய போது இதற்கான பதில் வழங்கப்படவில்லை. தனது திட்டங்களை இலங்கையின் புதிய அரசாங்கம் இடைநிறுத்திய போது அதற்கான நட்டஈட்டை வழங்குமாறு சீன அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் கோரியதாகவும் அனைத்துலக வர்த்தக அமைச்சில் பணியாற்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமபாந்தோட்டை துறைமுகமானது இலங்கையில் பாரியதொரு கடன் சுமையை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை துறைமுக அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார். இலங்கையின் தேசிய கடனானது தற்போது 64 பில்லியன் டொலராகக் காணப்படுகிறது. இதில் சீனாவின் கடன்நிலுவை 8 பில்லியன் டொலராகும்.

தற்போது அம்பாந்தோட்டை ஒரு உறங்குநிலையில் உள்ளது. அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் விமான நிலையம் போன்றன உருவாக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில் நாளொன்றுக்கு ஒரு விமானப் பறப்பு அல்லது ஐந்து தொடக்கம் ஆறு வரையான கப்பல்கள் தரித்து நிற்பது மட்டுமே இடம்பெறுகிறது.

இதேபோன்று அம்பாந்தோட்டைப் பட்டிணத்திற்குச் செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள நெடுஞ்சாலை மற்றும் புதிய மாநாட்டு மண்டபம் போன்றன பயனற்றுக் காணப்படுகின்றன. அத்துடன் இங்கு சீனர்களால் உருவாக்கப்பட்ட துடுப்பாட்ட அரங்கானது திருமண வரவேற்புக்களுக்காகவே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

வழிமூலம் – Reuters
ஆங்கிலத்தில் – Shihar Aneez
மொழியாக்கம் – நித்தியபாரதி




# குட்டித் தோழி

இரயில் அரை மணி நேரம் தாமதம்.

எந்த இரயில் சரியான நேரத்திற்கு வருகிறது? இரயில் நிலையத்தில் அன்று கூட்டம் சற்று அதிகமாகவே இருந்தது.

சென்ற வெள்ளிக்கிழமை விடுமுறை என்பதால் இந்த ஞாயிற்றுக்கிழமை அதிக கூட்டம்.

காட்பாடியில் இருந்து பெங்களூர் செல்ல எப்படியும் நான்கு மணி நேரம் பிடிக்கும்.

எப்படி நேரத்தை செலவு செய்வது? புதிதாய் வாங்கிய புத்தகம் இரண்டையும் வீட்டிலேயே விட்டுவிட்டேன்.

ஹிக்கின்போத்தம்ஸ் கடை எதிர் பிளாட்பாரத்தில் தான் இருந்தது.

அங்கு சென்றுவர சோம்பேறித்தனம்!

"டங் டங். பயணிகள் கவனத்திற்கு, சென்னையில் இருந்து பங்காருப்பேட்டை வழியாக பெங்களூர் செல்லும் லால்பாக் எக்ஸ்பிரஸ் இன்னும் சற்று நேரத்தில் ஒன்றாவது பிளாட்பாரத்தில் வந்து சேரும்."

என்னுடைய சிறு வயதில், "எப்படி இந்த அக்கா வார்த்தை தவறாமல், ஒரு தவறில்லாமல் அறிவிக்கிறாங்க"ன்னு அதிசயித்தது உண்டு.

வண்டி வந்தது. என் இருக்கையைத் தேடிப் பிடித்து உட்காருவதற்குள் பெரும் சிரமமாகிவிட்டது.

எதிரிலே மூன்று நாள் தாடியுடன் முப்பத்தைந்து வயதான கணவன், முப்பதை சற்றே கடந்திருக்கும் மனைவி மற்றும் எல்லாம் வாழ்ந்து முடிந்தது போன்ற தோற்றத்தில் ஒரு பெரியவர்.

இரயிலின் சத்தத்தைவிட அதிகமாக அருகே அழுகுரல்.

குழந்தைகளின் சண்டை. சண்டையிட்டது ஒரு ஆறு வயது பெண்குழந்தையும் நான்கு வயது சிறுவனும்.

"விடுடா விடு" ஏதோ ஒரு விளையாட்டுப் பொருளுக்காக சண்டை.

"மம்மி அந்தப் பையன் பீப்பீல எச்சி வெச்சிட்டான்".

லேசான சிணுங்கல் அந்தப் பெண் குழந்தையிடம்.

"அமுதா.. இங்க வா. தம்பி தானே.. வா வந்து தாத்தாகிட்ட உட்கார்."

அப்போது தான் தெரிந்தது அந்தக் குழந்தை எதிரே அமர்ந்திருந்தது 35-30 வயது குழந்தை என்று.

"தா அதை முதலில் பையில் வைக்கிறேன். அமைதியா எங்காச்சும் இருக்கியா நீ?" இது அமுதாவின் அப்பா.

ஒரு மணி நேரம் கடந்ததே தெரியவில்லை. பயணம் முழுவதும் அமுதாவின் அட்டகாசங்களை மட்டுமே நோட்டமிட்டபடி நான்.

மடிக்கு மடி தாவினாள். தாத்தாவிடம் கொஞ்சினாள். அம்மாவிடம் அடாவடித்தாள்.

அந்தச் சிறுவனிடம் "உன் பேச்சு டூ" என்றாள். அப்பாவிடம் அடக்கமாக சில நிமிடம்.

என் மடிக்கும் வந்து சேர்ந்தாள்.

"பாப்பா பேரு என்ன?"

"பாப்பாவா? யாரு பாப்பா? ஐ யஅ ய டிபை பசைட"

"ஓ அப்படிங்களா மேடம்? சொல்லுங்க உங்க பேரு என்ன?"

"அமுதா.. உங்க பேரு என்ன?" மழலைத் தமிழில் கேட்டாள்.

தமிழே அழகு! அதுவும் மழலைத்தமிழ் அழகோ அழகு..

தொடரும்...




- 1238 - மங்கோலியர்கள் ரஷ்யாவின் விளாடிமீர் நகரைத் தீயிட்டுக் கொளுத் தினர்.
- 1807 - நெப்போலியனின் பிரெஞ்சுப் படைகள் ரஷ்யா, மற்றும் புருசியாப் படைகளின் மீது போலந்தில் தாக்குதலைத் தொடங் கினர்.
- 1812 - மிசூரி மாநிலத்தில் நியூ மாட்ரிட் என்ற இடத்தில் பெரும் நிலநடுக்கம் தாக்கியது.
- 1819 - ஸ்டாம்ஃபோர்ட் ராஃபில்ஸ் சிங்கப்பூரை வில்லியம் ஃபார்க்கூஹார் என்பவரிடம் ஒப்படைத்து விட்டு சிங்கப்பூரில் இருந்து புறப்பட்டார்.
- 1845 - இலங்கை அரச ஆசியர் சமூகத்தின் இலங்கைக் கிளை கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1863 - நியூசிலாந்து, ஆக்லாந்து நகர்க் கரையில் ஓர்ஃபியஸ் என்ற கப்பல் மூழ்கியதில் 189 பேர் கொல்லப் பட்டனர்.
- 1904 - மேரிலாந்தில் பால்ட்டிமோர் என்ற இடத்தில் பரவிய தீயினால் 1,500 கட்டடங்கள் 30 மணி நேரத்தில் தீக்கிரையாகின.
- 1914 - சார்லி சாப்ளினின் முதல் திரைப்படம் முனை யரவழ சுயஉநள யவ ஏநலைந வெளியானது.
- 1962 - கியூபாவுடனான ஏற்றுமதி, மற்றும் இறக்குமதி தடைகளை ஐக்கிய அமெ ரிக்கா கொண்டு வந்தது.
- 1967 - அலபாமாவில் உணவகம் ஒன்றில் பரவிய தீயினால் 25 பேர் கொல்லப் பட்டனர்.
- 1967 - தாஸ்மேனியாவில் இடம்பெற்ற காட்டுத்தீயினால் 62 பேர் கொல்லப் பட்டனர்.
- 1971 - சுவிட்சர்லாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.
- 1974 - ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து கிரனாடா விடுதலை பெற்றது.
- 1977 - சோவியத் ஒன்றியம் சோயுஸ் 24 விண்கலத்தை இரண்டு விண்வெளி வீரர்களுடன் விண்ணுக்கு ஏவியது.
- 1979 - புளூட்டோ நெப்டியூனின் சுற்றுப் பாதைக்குள் நுழைந்தது.
- 1986 - எயிட்டியில் 28 ஆண்டுகள் குடும்ப ஆட்சி நடத்திய அதிபர் ஜீன்-குளோட் டுவாலியர் கரிபியன் நாட்டிலிருந்து வெளியேறினார்.
- 1990 - சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு தனி ஆதிக்கத்தை கைவிட இணங்கியது.
- 1991 - எயிட்டியின் முதலாவது மக்களாட்சித் தலைவராக ஜீன்-பேட்ரண்ட் ஆரிஸ்டீட் பதவியேற்றார்.
- 1991 - ஐரிஷ் குடியரசு இராணுவம் லண்டனில் 10 டவுனிங் வீதியில் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்ற போது அங்கு குண்டுத் தாக்குதலை நடத்தியது.
- 1992 - ஐரோப்பிய ஒன்றியம் அமைப் பதற்கான மாஸ்ட்ரிக்ட் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.
- 1999 - உலகத்தமிழிணைய மாநாடு சென்னையில் ஆரம்பமானது.
- 2005 - விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப் பாளர் கௌசல்யன் உட்பட 4 விடு தலைப் புலிகள் இலங்கை இராணு வத்தினரின் தாக்குதலில் கொல்லப் பட்டனர்.

**பிறப்புகள்**

- 1478 - தாமஸ் மோர், ஆங்கிலேய சட்டத் தரணி, அரசியல்வாதி (இ. 1535)
- 1812 - சார்ள்ஸ் டிக்கன்ஸ், ஆங்கில எழுத் தாளர் (இ. 1870)
- 1877 - ஜி. எச். ஹார்டி, ஆங்கிலேயக் கணிதவியலாளர் (இ. 1947)
- 1902 - தேவநேயப் பாவாணர், தமிழறிஞர் (இ. 1981)
- 1933 - கே. என். சொக்சி, இலங்கை அரசியல்வாதி, அமைச்சர் (இ. 2015)
- 1965 - கிறிஸ் ராக், அமெரிக்க மேடைச் சிரிப்புரையாளர், நடிகர்
- 1974 - ஸ்டீவ் நேஷ், கூடைப்பந்து ஆட்டக்காரர்
- 1978 - ஆஷ்டன் குட்சர், அமெரிக்க நடிகர்
- 1979 - தவக்குல் கர்மான், அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற யெமனியர்.

**இறப்புகள்**

- 1878 - ஒன்பதாம் பயஸ் (திருத்தந்தை) (பி. 1792)
- 1919 - ஹென்றி பூலன், யாழ்ப்பாண ஆயர்.
- 2008 - குணால், திரைப்பட நடிகர்

**சிறப்பு நாள்**

- கிரனாடா - விடுதலை நாள் (1974)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 160 | 90 | 160 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 140 | 240 | 180 | 200 | 200 |
| தக்காளி | 80 | 100 | 60 | 60 | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 60 | 80 | 60 |
| கோவா | 30 | 100 | 20 | 30 | 40 | 60 | 40 |
| கரட் | 70 | 100 | 50 | 60 | 60 | 120 | 80 |
| பூசணி | 80 | 60 | 30 | 60 | 50 | 80 | 60 |
| புடோல் | 80 | 120 | 40 | 80 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 80 | 40 | 60 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 160 | 80 | 120 | 120 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 70 | 90 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 300 | 100 | 200 | 120 | 300 | 150 |
| வெண்டிக்காய் | 140 | 150 | 60 | 120 | 100 | 160 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 60 | 100 | 60 |
| பயற்றங்காய் | 250 | 300 | 220 | 250 | 150 | 200 | 200 |
| லீக்ஸ் | 60 | 100 | 60 | 80 | 60 | 100 | 100 |
| பீற்றூட் | 60 | 100 | 40 | 60 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 300 | 130 | 200 | 180 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 550 | 800 | 500 | 600 | 500 | 800 | 700 |
| போஞ்சி | 120 | 200 | 40 | 80 | 800 | 120 | 100 |
| கத்தரிதம்பள்ள | 120 | 150 | 60 | 120 | 120 | 120 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 50 | 40 | 30 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 | 140 | 150 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 60 | 60 | 60 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 200 | 200 | 150 | 160 | 160 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 100 | 60 | 80 | 80 | 30 | 200 |
| முள்ளங்கி | 50 | 100 | 30 | 60 | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 10 | 30 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 20 |
| குப்பை | 80 | 60 | 50 | 60 | 60 | 80 | 60 |

ஒரு ஆட்டுக் கூட்டத்திற்கு சிங்கம் தலைமை வகிக்கலாம். ஆனால் சிங்கக் கூட்டத்திற்கு ஆடு தலைமை வகிக்கக் கூடாது.
~ டானியல் டீஃபோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அம்மாவுக்கு அடுத்தது சின்னம்மாவா... அல்லது...

தமிழகத்தின் முதலமைச்சராக திருமதி சசிகலா அவர்கள் பதவியேற்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. செல்வி ஜெயலலிதா அவர்களின் மரணம் எதிர்பார்க்கப்படாத ஒன்று. இருந்தும் அவர் மரணித்த பின்பு அடுத்த முதல்வர் திருமதி சசிகலாதான் என்று தமிழக மக்கள் நினைத்திலர்.

எனினும் சசிகலாவை சின்னம்மா என்று அழைத்த அ.தி.மு.கவின் முக்கிய புள்ளிகள் அவரை முதலமைச்சராக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர்.

இதில் வேடிக்கை என்னவெனில், ஜெயலலிதாவின் மறைவுச் செய்தியை அறிவிக்கும் வேளையில் ஓ.பன்னீர்செல்வம் தமிழக ஆளுநர் அலுவலகத்தில் தமிழகத்தின் முதல்வராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குரியவரான பன்னீர்ச்செல்வத்தை இரண்டு தடவைகள் ஜெயலலிதாவே முதல்வராக்கினார். ஆனால் ஜெயலலிதா இறந்த பின்னர் பன்னீர்ச்செல்வத்தை முதல்வராக் குவதற்கு அ.தி.மு.கவில் இருக்கக்கூடிய முக்கிய பிரமுகர்கள் சிலர் விரும்பவில்லை. இருந்தும் ஜெயலலிதாவின் மரணம் அவரின் இறுதிச் சடங்குகள் தமிழக மக்களின் மனக்குமுறல் என்ற ஒரு புறநடைச் சூழ்நிலையில் ஓ.பன்னீர்ச் செல்வம் முதல்வராக இருக்கட்டும். அதன் பின் சசிகலாவை அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராக்கி அவரை தமிழகத்தின் முதல்வராக்குவது என அ.தி.மு.கவின் முக்கிய பிரமுகர்களும் ஓ.பன்னீர்ச்செல்வத்தின் மீது வெறுப்புக் கொண்டவர்களும் முடிவு கட்டினர்.

இரண்டு தடவைகள் தான் சிறை சென்றபோது பன்னீர்ச்செல்வத்தை தனக்கு அடுத்த படியாக முதல்வராக்கியவர் செல்வி ஜெயலலிதா. இதற்கு எவரும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவில்லை.

பன்னீர்ச்செல்வமும் இராமருக்கு வாய்த்த பரதன் போல ஜெயலலிதாவுக்கு வாய்த்த ஒரு சகோதரனாக இருந்தார். அம்மா வந்து முதல்வர் கதிரையில் அமரும் வரை தாடி எடுப்பதில்லை என விரதம் பூண்டு முதல்வர் பதவியை வகித்தார்.

ஆனால், செல்வி ஜெயலலிதா இல்லாதபோது பாவம் பன்னீர்ச்செல்வம் என்பதாக நிலைமை முடிந்து போனது.

ஜெயலலிதாவின் மரணத்திற்குப் பின்னர் அவரின் மறைவுச் செய்தியை தமிழக மக்களுக்கு எப்போது அறிவிக்க வேண்டும் என்பதைக் கூட திருமதி சசிகலாவே தீர்மானித்தார்.

ஜெயலலிதாவின் இறுதி அஞ்சலி நடைபெற்ற போது ஓ.பன்னீர்ச்செல்வம் ஒரு குந்தில் குந்தியிருந்தார். எல்லாம் சசிகலாவின் விருப்பப்படியும் கட்டளைப்படியும் நடந்து கொண்டது.

பிரதமர் மோடி அவர்கள் ஜெயலலிதாவுக்கு அஞ்சலி செலுத்த வந்த போது பிரதமர் மோடியின் கையைப்பிடித்து பன்னீர்ச்செல்வம் விட்ட கண்ணீர் அம்மாவுக்கானது மட்டுமல்ல.

இனியெல்லாம் சின்னம்மா என்ற, சசிகலாவின் உத்தரவுதான் என்ற வேதனையும் சேர்ந்ததாக பன்னீர்ச்செல்வத்தின் கண்ணீர் கருத்துரைத்தது.

உண்மையில் செல்வி ஜெயலலிதாவின் இறுதி நிகழ்வுகளின் போது சசிகலாவை விட பன்னீர்ச் செல்வத்தின் முகத்திலேயே தாளமுடியாத வேதனையும் கவலையும் புரையோடியிருந்தது.

எது எவ்வாறாயினும் பன்னீர்ச்செல்வம் அவர்கள் முதல்வர் பதவியை தன்னுடைய தாக்குவதில் இறுக்கமாக இருக்கவில்லை. அவ்வாறு இருப்பது தனக்கு ஆபத்து என்று அவர் கருதியிருக்கலாம்.

ஆளான முதல்வராக இருந்த ஜெயலலிதா அம்மாவுக்கே இத்தகைய நிலைமை என்றால் எனக்கு எந்த மாட்டு... என்று பன்னீர்ச்செல்வம் தனக்குள் கேள்வி எழுப்பியிருக்கலாம். இதன் விளைவாக சின்னம்மாவுடன் சேர்ந்து போவதுதான் ஒரே வழி என்று பன்னீர்ச்செல்வம் முடிவு செய்தார் என்று அனுமானிப்பதில் தவறில்லை.

எதுவாயினும் சின்னம்மா நிலைப் பாட்டுநிலையை மைக்குப் படுவதையும் காலம்தான் தீர்மானிக்கும்.

# தைப்பூச வழிபாடு

வயாவிளான்தெற்குஞான வைரவர் ஆலயத்தில் தைப்பூச வழிபாடு நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. எதிர் வரும் வெள்ளிக்கிழமை 10 ஆம் திகதி தைப்பூச சிறப்புப் பூசைகள் நடத்தப்பட்டு விசேட நிகழ்வாக அன்னதானமும் இடம்பெறும்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் மக்கள் மீளச் செல்லமுடியாத நிலையிலேயே கடந்த சில வருடங்களாக படைத்தரப்பினரின் அனுமதியைப்பெற்றுவைகாசி விசாகப் பொங்கல் மற்றும் தைப்பூசத்தைக் கொண்டாடி வருகின்றனர்.

தைப்பூச வழிபாட்டிற்கான சகல வேலை களும் பூர்த்தியாக்கப்பட்டுள்ள நிலையில் ஆலயத்தில் குடிநீர் வசதி, மலசலகூட வசதி என்பவற்றுடன் முதலுதவிக்கான வசதிகளும் படையினரால் செய்யப்பட்டுள்ளது.

வயாவிளான் கிராமம் சிறு சிறு பகுதிகளாக ஆங்காங்கே விடுவிக்கப்பட்டிருந்தாலும் அவை விவசாய நிலங்களாகும். முக்கிய குடியிருப்புப் பகுதி உட்பட பெரும்பகுதி இன்னும் விடுவிக்கப்படாமலேயுள்ளது.

இக்கிராமம் உண்மையாக விடுவிக்கப்பட வேண்டியே இம்மாதிரியான முயற்சியில் கிராம மக்களும் வயாவிளான் பொது அமைப்புக்களும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வழிபாட்டில் கலந்துகொள்ள வருகை தரும் மக்கள் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு வயாவிளான் மத்திய கல்லூரிக்கு முன்பாக ஒன்று கூடுமாறு கேட்கப்படுகிறார்கள்.

அங்கிருந்து பேருந்துகள் மூலம் ஆலயத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர். இவற்றுக்கான சகல பூர்வாங்க ஏற்பாடுகளையும் ஆலய பரிபாலன சபையினர் மேற்கொண்டுள்ளனர். (இ)

# தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

வடமாகாண தொண்டராசிரியர்களுக்கான நியமனம் இடைவிடாத முயற்சியினால் மத்திய அரசின் கொள்கை முடிவின் படி வழங்குவதற்கு தீர்மானம் எட்டப்பட்ட போதும் அந்நியமனத்தில் சேவைக்காலம் 2009 இற்கு முன் 3 வருடம் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் உயர்ந்த கல்வித் தகைமை போன்றவற்றைப் பரிசீலிக்க மீண்டுமோர் நேர்முகத் தேர்வு விரைவில் நடைபெறவுள்ளதால் வடமாகாண தொண்டராசிரியர்கள் பலர் பாதிப்படையும் நிலையிலுள்ளனர்.

இப் பிரச்சினையைக் கருத்திற் கொண்டு இதற்கான சாதகமான தீர்வுகள் பற்றிக் கலந்துரையாடவும் தொண்டராசிரியராகப் பணியாற்றுவதை உறுதிப்படுத்தும் பூரண ஆவணங்களைக் கையேற்பதற்கும் அவசர கலந்துரையாடலொன்று நாளை (08.02.2017) முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாண ஆரியகுளம் உயர் கல்லூரியில் நடைபெற வுள்ளதால் அனைத்து வடமாகாண தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# சாஸ்திரங்கள்

✦ மூங்கில் மரத்தில் இந்திரன் வாசம் செய்வதாக ஒரு ஐதிகம் உண்டு. ஆகவே நம் வீட்டைச் சுற்றி மூங்கில் வளர்த்தால் அதிர்ஷ்டம் பெருகும். பெரும் புகழும் அதிகாரமும் செல்வச் செழிப்பும் உண்டாகும்.
-வாஸ்து சாஸ்திரம்

✦ நம் வீட்டில் மூங்கில் வளர்ப்பதால் வெளியிலிருந்து வருகின்ற எந்தக் கெட்ட சக்தியும் தன் வலிமையை இழந்து விடும். எதிர்ப்பின்றி ஏக சக்கரவர்த்தியாக புகழ்க்கொடி நாட்டலாம். நோய் நொடியின்றி நீண்ட காலம் வாழலாம்.
-வாஸ்து சாஸ்திரம்

✦ செல்வச் செருக்கு, செல்வாக்கு இவைகளால் ஆணவம் அதிகமாகி பிறரைத் துன்புறுத்தி அநீதியாய்ப் பொருள் சேர்ப்பவர்கள் இருளில் இனம் புரியாத பேய்களால் துன்புறுத்தப்படுவார்கள்.
-ஆசிமுகம் (சித்ரகுப்தர் புராணம்)

✦ சிவப்பு நிறம் நல்லதிர்ஷ்டத்தைக் குறிக்கும் நிறமாகும். திருமணத்தின் போது மணமகள் சிவப்பு நிறப் பட்டாடை உடுத்துவது உத்தமம், சிவப்பு நிறப் பெட்டியில், பீரோவில் பையில் பணம் சேர்த்து வைத்தால் அது மென்மேலும் பெருகும். சிவப்பு நிறம் சோம்பேறிகளை சுறுசுறுப்பாகச் செயற்பட வைக்கும்.
-இந்து சாஸ்திரம்

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர்போட்டி நாளை மறுதினம் 9 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் சொ. லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகவடக்குமாகாண சபை முகாமைத் துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர்கே.சிவகரன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர் கே.சுதாகரன், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அன்ரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**காலையில் வெறும் காலில் நடக்கலாமா?**




தினமும் கொஞ்ச நேரமாவது வெறும் காலில நடக்க வேண்டும். முந்தைய காலத்தில் அனைவரும் வெறும்காலில் தான் நடந்தார்கள். காலையில் எழுந்தவுடன் வெறும் காலால் தரையில் மிதித்து சிறிது நேரமாவது நடக்க வேண்டும்.

நாகரிகம் வளர்ந்துள்ள இக்காலத்தில் அநேகமாக அனைவரும் குழந்தைப் பருவம் முதல் செருப்பு அணிந்துதான் நடக்கிறார்கள். குழந்தைப் பருவம் முதல் செருப்பு, ஷூ ஆகிய வற்றைத் தொடர்ந்து உபயோகிப்பதனால் பெரியவர்களாக வளரும் போது காலின் வளர்ச்சி தடைப்படும்.

அப்போது அதிக தூரம் வெறும் காலில் நடக்க வேண்டியதிருந்தால் நடக்க முடியாமல் போகும். மேடு பள்ளங்களில் நடக்கும் போது கால் வலிக்கும். வெறுங் காலில் நடந்தால் பாதத்தின் வழியாகச் செல்லும் நரம்புகள் மூளை, இதயம் ஆகிய முக்கிய உறுப்புகளுடன் தொடர்பு கொண்டு உடலின் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கு உதவும். (தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரை யாழ்.பிரதேசத்தில் பொக்கணை, கெருடாவில், தொண்டைமானாறு, அக்கரை, மயிலியதனை, சிதம்பரா கல்லூரி, ஊரி, வலந்தலை, காரைநகர் படகுத்துறை, தோப்புக்காடு, களபூமி, காரைநகர் கடற்படை முகாம், SLNS ELARA காரைநகர் (Hotel) ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில சாந்தசோலைக் கிராமம், தெற்கிலுப்பைக்குளம் கிராமம், வெளிக்குளத்திலிருந்து குடாகச்சக்கொடிய வரை, கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, வவுனியா நகரத்திலிருந்து போகஸ்வேவா வரை, T.M.M கல்லுடைக்கும் ஆலை, வவுனியா நகரம், சூசைப்பிள்ளையார்குளம், ஓவியா விடுதி, S.V.R. அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை, கீர்த்தி அரிசி ஆலை, குடாகச்சக்கொடிய கல்லுடைக்கும் ஆலை, CEC கல்லுடைக்கும் ஆலை, 1ம் குறுக்குத்தெரு வவுனியா, பிரசன்னா கல்லுடைக்கும் ஆலை, பிரமனாளங்குளத்திலிருந்து பெரியதம்பனை வரை, கள்ளிக்கட்டிக் கணேசபுரம், நீலியாமோட்டை, பறயனாலங்குளம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் உமணகிரி, நறுவிலிக்குளம், ஆவாணம் வச்சியங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ எழுந்து நில்லுங்கள், தைரியமாயிருங்கள், பலமுடையவர்களாகுங்கள், முழுப் பொறுப் பையும் உங்கள் மீதே சுமத்திக் கொள்ளுங் கள். உங்கள் விதியைப் படைத்தது நீங்களே என் பதை அறியுங்கள். உங்களுக்கு வேண் டிய முழுப்பலமும் முழுத் துணையும் உங்களுக் குள்ளேயே இருக்கின்றன. ஆதலால் வருங்கால வாழ்க்கையை உங்கள் விருப்பப்படி அமைத்துக் கொள்ளுங்கள்.

❖ நாம் நோயாளி என்று எப்போதும் எண்ணுவது நமது நோயைப் போக்காது; மருந்து தேவை. நமது பலவீனத்தை நினைப்பதால் பெரிய பயன் ஒன்றும் விளையாது. பலத்தை ஊட்டுங்கள். பலவீனத்தை நினைத்தால் பலம் வராது. பலத்தைப் பற்றிய நினைவே பலவீனத்தை ஒழிக்கும் வழி; பலவீனச் சிந்தனையல்ல.

❖ இவ்வுலகிலோ அல்லது மறு உலகிலோ இழிவுக்கும் பாவத்திற்கும் உறுதியான காரணம் அச்சமே என்பது உண்மை. அச்சமே துயரத்தைத் தருவது. அச்சமே மரணத்தைத் தருவது. அச்சமே கேட்டை விளைவிப்பது. அதை உண்டு பண்ணுவது எது? நமது உண்மை இயல்பை அறியாமையே. நம்மில ஒவ்வொருவரும் மன்னருக்கெல்லாம் மன்னரான இறைவனின் வாரிசுகள்.

# காதல் மலர்ந்த நினைவிடத்தில் டோனியின் மகளின் பிறந்த நாள்



இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் டோனி குடும்பத்துடன் முசோரிக்கு சென்றுள்ளார்.

இன்று டோனியின் மகள் Ziva டோனியின் பிறந்தநாளை குடும்பத் துடன் முசோரியில் கொண்டாட திட்டமிட்டிருந்ததாக கூறப்படுகிறது.

விமானம் மூலம் ஜாலிகிரான்ட் விமான நிலையத்திற்கு சென்ற டைந்த டோனி, அங்கிருந்து முசோரிக்கு காரில் சென்றார்.

டோனியும் சாக்சியும் காதலிக் கும்போது முசோரிக்கு அடிக்கடி சென்றுள்ளனர்.

முசோரிக்கு டோனி செல்லும் தகவல் அறிந்ததும், அவர் தங்கும் ஹோட்டல் முன்பு ஏராளமான ரசிகர்கள் திரண்டனர்.

காரில் இருந்து இறங்கிய டோனி ரசிகர்களைப்பார்த்து கையசைத்து விட்டு ஹோட்டலுக்குச் சென்றார்.

# கருவில் கலைக்க நினைத்த குழந்தை இன்று கால்பந்து உலகின் மகுடம்

## ரொனால்டோ பற்றிய இரகசியம் வெளியானது



கால்பந்து உலகில் தனக்கென்று ஒரு ரசிகர் பட்டாளத்தையே கொண்டவர் போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ. அவரைப் பற்றிய சில சுவாரஸ்யமான தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

அதில் ரொனால்டோ கால்பந்து வீரர் என்பதையும் தாண்டி அவர் ஒரு பிளே போய் என்பது எத்தனை பேருக்கு தெரியும், என்பது தெரியவில்லை.

மளிகைக் கடை பட்டியல் போல நீளும் அவரது கேர்ள் ஃபிரண்ட்ஸ் லிஸ்ட். கல்யாணம் ஆகவில்லை. குழந்தை உண்டு.

எனக்கு தந்தை ஆக வேண்டும் என ஆசை இருந்தது. குழந்தை பெற்றுக்கொண்டேன். ஆனால், என் மகனின் தாய் யார் என்பதை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

நேரம் வரும்போது என் மகனிடம் மட்டும் அதைச் சொல்வேன். அவனும் புரிந்து கொள்வான் என நம்புகிறேன் என ரொனால்டோ விளக்கம் சொல்லியதாக கூறப்படுகிறது.

ஜூனியர் ரொனால்டோ மட்டுமா? கிறிஸ்டியானோ ரொனால்டோவின் பிறப்பும் விசித்திரமானது என்று கூறப்படுகிறது.

ரொனால்டோ கருவில் இருக்கும் போது, அந்தக் கருவைக் கலைக்க நினைத்தாராம் அவர் தாய்.

ஆம், கருவிலேயே கலைக்க நினைத்த குழந்தைதான் இன்று கால்பந்து உலகை ஆள்கிறது என்றால் மிகையல்ல.

# கடந்த ஆண்டு அதிகம் சம்பாதித்து கோடிகளில் மிதக்கும் ரொனால்டோ

2016 ஆம் ஆண்டு உலகின் அதிக சம்பளம் பெற்ற விளையாட்டு வீரர்களின் பட்டியலை அமெரிக்க வர்த்தகப் பத்திரிகையான போர்பஸ் வெளியிட்டுள்ளது.

அதன் படி 2016 ஆம் ஆண்டு அதிக சம்பளம் பெற்ற விளையாட்டு வீரர்கள் பட்டியலில் போர்த்துக்கல் கால்பந்து நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோ முதலிடத்தை பிடித்துள்ளார்.

அவர் சென்ற ஆண்டு மட்டும் 88 மில்லியன் டொலர் (இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 1,300 கோடி) சம்பளமாக பெற்றுள்ளார்.


வீரர்களின் சம்பளம் மற்றும் அவர்கள் ஒப்பந்தங்கள் மூலம் பெற்ற தொகையை கணக்கிட்ட போர்பஸ், 2016 ஆம் ஆண்டு உலகளவில் அதிக சம்பளம் பெற்ற 100 வீரர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில், இரண்டாவது இடத்தை ஆர்ஜென்டீனா கால்பந்து நட்சத்திரம் மெஸ்ஸி பிடித்துள்ளார்.

மெஸ்ஸி 81.4 மில்லியன் டொலர் (இலங்கை மதிப்பில் 1,200 கோடி) வருமானம் ஈட்டியுள்ளார்.

மொத்தத்தில், 100 பேர் பட்டியலில், 26 பேஸ்போல் வீரர்கள், 21 அமெரிக்க கால்பந்து வீரர்கள், 18 என்பிஏ கூடைப்பந்து வீரர்கள், 12 கால்பந்து வீரர்கள், 7 டென்னிஸ் வீரர்கள், ஆறு பந்தய வீரர்கள், 5 கோல்ப் விளையாட்டு வீரர்கள், 3 குத்துச்சண்டை வீரர்கள் மற்றும் தடகள வீரர் உசைன் போல்ட் மற்றும் யுஎப்சி வீரர் கோனார் மெக்கிரேகர் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

# காயம் குணமாகாத அஞ்சலோ மத்யூஸ் அவுஸ்திரேலியாவுடனான போட்டியிலும் இல்லை



## தலைவராகிறார் உப்புல் தரங்க

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இருபது - 20 தொடரில் இருந்து காயம் காரணமாக இலங்கை அணியின் தலைவரான மத்யூஸ் விலகியுள்ளார்.

இலங்கை அணி அண்மையில் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இருபது - 20 போட்டியில் விளையாடியது.

இதில் இலங்கை அணியின் தலைவரான மத்யூஸின் தொடையில் ஏற்பட்ட காயம் காரணமாக தொடரிலிருந்து விலகினார்.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இருபது - 20 தொடரிலும் மத்யூஸ் பங்கேற்கவில்லை என்று கூறப்படுகிறது.


இன்னும் காயம் முழுமையாக சரியாகததால் அவர் இத்தொடரில் பங்கேற்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதனால் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இருபது - 20 தொடருக்கு உப்புல் தரங்க தலைவராக செயற்படுவார் என்று கூறப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணி போன்ற பெரிய அணிக்கு எதிரான தொடரின் போது ஒரு அனுபவ வீரர் இல்லாதது இலங்கை அணிக்கு ஒரு அடியாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

மேலும் இவ்விரு அணி களுக்கிடையேயான முதல் இருபது - 20 போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி மெல்பேர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# அஸ்வின் சிறப்பாகச் செயற்படுகிறார் என்னுடன் அவரை ஒப்பிட வேண்டாம்



## சாஹிப் அல் ஹசன் தெரிவிப்பு

இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் ஐதராபாத்தில் தொடங்குகிறது.

இந்தியாவிற்கு எதிரான போட்டி குறித்து சகலதுறை ஆட்டக்காரர் சாஹிப் அல் ஹசன் கூறுகையில்,

இந்தப் போட்டி ஒவ்வொரு வீரர்களுக்கும் சவாலானது. ஒரு துறையை மட்டும் நம்பி ஒரு அணி வெற்றியை சார்ந்திருக்க முடியாது.

நியூசிலாந்து தொடரில் இது நடந்தது. ஒருநாள் நாங்கள் சிறப்பாக துடுப்பாட்டம் செய்தோம், அடுத்து நாள் பந்துவீச்சில் சிறப்பாக செயற்பட்டோம்.

ஆனால், இரு துறைகளிலும் ஒரேநாளில் சிறப்பாக செயற்படமுடியாமல்போனது.

புதிய வீரர்கள் இருந்த போதிலும் ஒவ்வொரு வீரரும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டியது அவசியம். பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உள்ளது.

அஸ்வினுக்கும் உங்களுக்கும் இடையில் போட்டி நிலவுகிறதா? என்று கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், அஸ்வின் கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக இந்திய அணிக்காக சிறப்பாக பந்து வீசிவருகிறார்.

அவருடைய கட்டுப்பாடு அவரை தனி வீரராக உருவாக்கியுள்ளது. பந்து வீச்சில் என்னசெய்ய விரும்புகிறாரோ, அதை அவர் செய்கிறார். அவருடைய கட்டுப்பாடு மற்றும் உறுதி அவரை முதல் நிலை வீரராக உருவாக்கியுள்ளது.

அஸ்வின் உடன் எந்தவொரு போட்டியும் இல்லை. அவருடனான வழியில் நான் உள்ளேனா என்று என்னால் நினைக்கத்தோன்றவில்லை. அந்த வழியில் எந்தவொரு நினைப்பும் இல்லை.

அவருடைய இடத்தில் இருந்து அவர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். என்னுடைய வழியில் நான் எனது சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சி செய்து வருகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## எவ்வித பாதுகாப்பு...

இங்கிருந்து இடம்பெயர்ந்து சென்றோம். அனைத்து பிரதேசங்களிலும் நாடோடிகளாக அலைந்து திரிந்து யுத்தத்தால் பாதிக்கப்பட்டோம். பின்னர் இத்தனை வருடங்களாக முகாம்களில் சொல்லொணா துயரங்களை அனுபவித்துக்கொண்டிருந்தோம்.

எம்மை மீள்குடியேற்றுவதாக கூறி தற்போது ஒரு பகுதியில் எம்மை குடியமர்த்தி உள்ளார்கள். ஒவ்வொருவரும் தமது சுயலாபத்துக்காக எம்மை பயன்படுத்தியுள்ளார்கள்.

மக்களை மீள் குடியேற்றும் முன்பு மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும். ஆனால் எமக்கு எந்த அடிப்படை வசதிகளும் செய்யவில்லை. முகாம்களில் உள்ள மக்களை மீள் குடியேற்றி விட்டதாக வெளி உலகத்துக்கு காண்பிப்பதற்காக மட்டுமே எம்மை மீள் குடியேற்றி உள்ளார்கள்.

ஏனெனில் எமது பகுதியில் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படவில்லை, பற்றைகள் அழிக்கப்படவில்லை, குடிநீர் வசதி இல்லை, பாரிய பள்ளங்கள் நிரவப்படவில்லை இவை ஒன்றும் சீர்திருத்தி தரப்படாமல் எம்மை மீள் குடியேற்றி என்ன பயன்? நாம் இங்கு வருவதற்கு முன்னர் எமக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் படி கோரியிருந்தோம். அனைத்தும் செய்து தருவதாக கூறியே எம்மை குடியமர்த்தினார்கள். ஆனால் இன்றுவரை செய்து தரப்படவில்லை. இவ்வாறு தான்இருக்கும் என தெரிந்திருந்தால் நாம் முகாமிலேயே இருந்திருப்போம்.

நேற்று முன்தினம் இப்பகுதியில் உள்ள பாழடைந்த குழி ஒன்றில் சிறுவன் ஒருவன் விழுந்து இறந்துள்ளான். குறித்த பகுதியையும் அக் குழியையும் துப்பரவு செய்துதரும் படி கோரியிருந்தோம் இராணுவத்தினர் செய்து தருவதாக உறுதியளித்திருந்தனர். ஆனால் செய்து தரவில்லை. அந்த சிறுவன் முகாமில இருந்திருந்தால் இறந்திருக்க மாட்டான்.

நாங்கள் நாளாந்தம் கூலி வேலைக்கு செல்கிறோம். இங்கு 150க்கு மேற்பட்ட சிறுவர்கள் உள்ளார்கள். விளையாடும் பிள்ளைகளுக்கு பாதுகாப்பில்லை. நாங்கள் நிம்மதியாக வேலைக்கு செல்ல முடியவில்லை.

எமது பாதுகாப்பை உறுதி செய்து எமது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்தால் மாத்திரமே இங்கு குடியேறுவோம். இல்லையெனில் இந்த பகுதியை விட்டு மீண்டும் முகாம்களுக்கே செல்கிறோம். யுத்தத்தால் அனைத்தையும் இழந்தோம். தற்போது குடிக்க நீர் இன்றியும் பாதுகாப்பின்றியும் ஒவ்வொரு உயிர்களாக பறிகொடுத்து வருகிறோம். நாம் அனைவரும் இப்பகுதியை விட்டு விரைவில் அழிந்து போவோம் இராணுவம் கடற்படையினர் எமது பகுதிகளில் மீண்டும் நிலை கொள்வார்கள். இது அனைத்துக்கும் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர். (செ-9)

## தமிழ்மொழிக்கு...

10ஆம் திகதி நடைபெறவுள்ள எழுக தமிழ நிகழ்வை முன்னிட்டு அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எனதினிய கிழக்கிலங்கை வாழ் தமிழ்ப் பேசும் சகோதர சகோதரிகளே!

எழுக தமிழானது மட்டக்களப்புக்கு விஜயம் செய்ய இருப்பதை நீங்கள் அறிவீர்கள். தமிழ்ப் பேசும் சகல மக்களையும் எழுக தமிழ நடைபவனியில் பங்குபற்ற அழைக்கின்றேன். எம்மக்கள் மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தின் அண்டையில் இருந்து நாவற்குடா விவேகானந்தா விளையாட்டுக் கழகத்திடலுக்கு இம் மாதம் 10ஆம் திகதி காலை பவனி வரக் காத்திருக்கின்றார்கள்.

எமது அழைப்பு கட்சி சார்ந்ததல்ல. மதம் சார்ந்ததல்ல. இனம் சார்ந்ததல்ல. எமது அழைப்பு தமிழ்மொழி சார்ந்தது. தமிழ்மொழி பேசும் யாவரும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். எமது பவனி எழுக தமிழர என்று பெயரிடப்படவில்லை. இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ சகோதரத்துவத்தை அவர்களின் பொது மொழியாம் செந்தமிழ் ஊடாக நிலை நிறுத்தவே எமது பவனியானது எழுக தமிழ் என்று பெயர்பெற்றது.

ஏன் தமிழுக்கு முதலிடம் கொடுத்துள்ளீர்கள் என்று நீங்கள் கேட்கலாம். ஏனென்றால் கிழக்கு மாகாணத்தில் 85 சதவிகிதத்திற்கு மேல் தமிழ்ப் பேசுவோர் இருந்த காலம் போய தற்போது மூன்றில் ஒரு பங்கு சிங்கள மொழியால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. காணிகள் பறிபோயுள்ளன. கலைகள் சிதைவடைந்துள் ளன. கலாசாரம் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன. மொத்தத்தில் எழுக சிங்களம எல்லை தாண்டி வந்து இங்கு குடிகொண்டுள்ளது. சுயநலம் மிக்க அரசியல்வாதிகளுக்கன்றி மற்றவர்கள்யாவர்க்கும் இது வெள்ளிடைமலை.

இது காறும் ஒடுக்கப்பட்ட தமிழ்ப் பேசும் மக்கள் இனியாவது விடிவு காணவே "எழுக தமிழ்" எழுந்து வருகின்றது.

இந்து-முஸ்லிம் மக்களுக்கிடையேயான முரண்பாடுகள் ஆக்கப்பட்டவையே ஒழிய அனவரதமும் அமைந்திருந்த ஒரு நிலைப்பாடு அல்ல. அதைத் தற்போது எமது முஸ்லிம் சகோதரர்கள் தெரிந்து கொண்டு வருகின்றார்கள். இந்து, கிறிஸ்தவ, தமிழ் மக்களும் இஸ்லாமியத் தமிழ மக்களும் காலாதி காலமாக பிட்டும் தேங்காய்ப்பூவும் போல் இயைந்து செயற்பட்டுவிட்டு அண்மைக் காலங்களில் மட்டும் ஏன் முரண்பட்டு இருக்கின்றார்கள் என்பதை இருதரப்பாரும் உணர்ந்து கொள்ளவேண்டும். முரண்பாடுகள் எம்மேல் திணிக்கப்பட்டதே காரணம். அவ்வாறு திணிக்கப்பட்டதற்கு எமது குறுகிய நோக்கங்கள் கொண்ட அரசியல்வாதிகள் விதிவிலக்கன்று.

தமிழ்ப் பேசும் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மக்களின் ஒற்றுமையே கிழக்கிலங்கையைக காப்பாற்றுமே ஒழிய பொங்கு சிங்களத்தின் பயண வேகத்தை வேறெந்த சக்தியாலும் கட்டுப்படுத்த முடியாது. நாம் தொடர்ந்தும் எமது வேற்றுமைகளுக்கு முதலிடம் கொடுத்தோமானால் கிழக்கு மாகாணம் மொழி மாற்றம் பெறுவது திண்ணமே.

தொடர்ந்து வந்த பெரும்பான்மை இனம் சார்பான அரசாங்கங்கள் யாவும் ஒரே நிகழ்ச்சி நிரலிலேயே செயற்பட்டுவருகின்றன. கட்சிகள் மாறினாலும் கரவான குடியேற்ற எண்ணங்களை எந்தப் பெரும்பான்மைக் கட்சியும் கண்டிக்கவில்லை கடியவில்லை. மாறாகத் தாமும் சேர்ந்து வடகிழக்கு மாகாணங்களின் குடிப்பரம்பலை, மொழிப்பரம்பலை மாற்றவே செய்துள்ளார்கள்.

எனவே வடகிழக்கு இணைப்பு என்பது தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரதும் பாதுகாப்புக் கருதியே எம்மால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வடகிழக்கு இணைப்பொன்றே தமிழ்ப் பேசும் மக்கள் தொடர்ந்து தமது வாழ்விடங்களில் நிம்மதியாக வாழ வழிவகுக்கும்.

இன சௌஜன்யத்தைக் கெடுக்கப் பார்க்கின்றார்கள், இன விரிசல்களுக்கு இடமளிக்கப் பார்க்கின்றார்கள் என்று எம்மேல் குற்றங்கள சுமத்தப்படுகின்றன. இதுவரை காலமும் நடைபெற்றுவரும் இன ஒடுக்கல்கள் பற்றி நாம் கூறினால் அது இனவிரிசலாகப் பெரும்பான்மையினராலும் எம்முள் சிலராலும் அர்த்தப்படுத்தப்படுகின்றன. உண்மையைக் கூறுவதைத் தடுக்க, எம்மைப் பயப்படுத்தி வைக்க, இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் வழிஅமைப்பன என்பது அவர்களின் எதிர்பார்ப்புப் போலத் தெரிகின்றது.

இப்பொழுது இருக்கும் சமாதானமானது இன நல்லுறவால் ஏற்பட்ட சமாதானம் அல்ல. செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட ஒன்றே. அதனால்தான் இராணுவத்தினரை பெரும் அளவினதாக வடக்கிலும் கிழக்கிலும் வைத்திருக்க விளைகின்றார்கள் மத்தியில் பதவியில் உள்ளோர்.

எங்களிடம் இருந்து கிடைக்கும் பாதுகாப்பு உங்களுக்குத் தமிழர்களிடம் இருந்து கிடைக்காது என்று கூறி தமிழ்ப் பேசும் முஸ்லிம் மக்களிடையே சந்தேகங்களையும் ஐயப்பாடுகளையும் வளர்க்கப் பார்க்கின்றார்கள். இவற்றையெல்லாம் களையுவே அனைத்துத் தமிழ்ப் பேசும் மக்களிடையேயும் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டிய காலத்தின் கட்டாயம் தற்போது எழுந்துள்ளது.

அரசியல் தீர்வு பற்றிப் பேசும் போது தமிழ் பேசும் மக்கள் யாவருமே கூட்டாட்சியாகிய சமஷ்டி முறையே சிறந்தது என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள். ஆனால் கடந்த கால நிகழ்வுகளின் காரணமாகவோ வேறு காரணங்களுக்காகவோ தமிழ்ப் பேசும் முஸ்லிம் மக்கள் உறுதி தளர்ந்து காணப்படுகின்றார்கள். தமிழ் மக்கள் தம்மை ஒதுக்கி விடுவார்களோ, தடுத்து வைப்பார்களோ என்று அச்சம் கொள்கின்றார்கள். ஆனால் அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாய் இருந்தால் என்ன, மக்கள் இயக்கமான தமிழ் மக்கள் பேரவையாக இருந்தால் என்ன தமிழ்மொழி பேசும் வடகிழக்கு மாகாணங்களில் முஸ்லிம் மக்களுக்காக ஒரு அலகை ஏற்படுத்துவதில் அவர்கள் தம் பூரண சம்மதத்தையே வெளிக்காட்டிவந்து உள்ளார்கள்.

வடகிழக்கு மாகாணங்கள் பாரம்பரியமாகத் தமிழ்மொழி பேசப்பட்டு வந்த மாகாணங்களே என்பதை உத்தியோகபூர்வமாகப் பதிந்து வைத்திருப்பது அத்தியாவசியம் என்பது தற்பொழுது எல்லாத் தமிழ்ப் பேசுந் தரப்பாருக்கும் புரிகின்றது. ஆனால் சந்தேகங்கள், ஐயப்பாடுகள், மக்களை ஒருங்கிணைக்க விடாது தடுக்கின்றன.

"எழுக தமிழ்" அரசியல் சார்ந்தது. ஆனால அரசியற் கட்சிகள் சார்ந்ததல்ல. சமூகம் சார்ந்தது ஆனால் சமயங்கள் சார்ந்ததல்ல. தமிழ் மொழி சார்ந்தது. ஆனால் தமிழ்மொழி அல்லாதவற்றைப் புறக்கணிக்காதது.

தமிழ்மொழிக்கும் அதைப் பேசும் மக்களுக்கும் தக்க ஏற்பினை வழங்க வேண்டும் என்று கேட்டே "எழுக தமிழ்" இம்மாதம் 10ந் திகதி நாவற்குடா விவேகானந்தா விளையாட்டுக் கழகத்திடலில் நடைபெற இருக்கின்றது. அதில் சகலரும் பங்குபற்ற வேண்டும் என்று கோரி எமது ஒற்றுமையினை உலகறியச் செய்ய இது ஒரு நல்ல தருணம் என்று கூறி வைக்கின்றேன் என வட மாகாண முதலமைச்சரால் விடுவிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

## மோ.சைக்கிள்...

டைந்துள்ளார். இவ்வாறு விபத்துக்குள்ளான தம்பதிகளுக்கு திருமணமாகி 09 நாட்களே கடந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலணை மேற்கு 6ஆம் வட்டாரத்தை சேர்ந்த தவநாகேஸ்வரன் பிரதீபன் (வயது 28) என்பவரே உடல் சிதைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தார். இவரது மனைவியான திருமதி பிரதீபன் நிறெஞ்சனா (டயானா) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழில் நடைபெற்ற புதுமனைப் புகுவிழாவில் பங்கேற்பதற்காக நேற்று முற்பகல்11 மணியளவில் வேலணை பகுதியில் இருந்து வேலணை அராலி சந்தியை நோக்கி குறித்த கணவன் மனைவி இருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். இதன்போது யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை நோக்கி கருங்கல் சல்லிகளை ஏற்றிக்கொண்டு டிப்பர் வாகனமொன்று பயணித்து கொண்டிருந்தது.

டிப்பர் வாகனமானது வேலணை அராலி சந்தியை அண்மிக்கும் போது வேலணை பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் வேலணை அராலி சந்தியை நோக்கி பயணித்தவர்கள் மோட்டார் சைக்கிளை யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதான வீதிக்கு ஏற்றியுள்ளனர். இதன்போதே டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்து நேரிட்டுள்ளது.

இவ் விபத்தின் போது மோட்டார் சைக்கிளை மோதிய டிப்பர வாகனமானது மோட்டார் சைக்கிளை சுமார் 50மீற்றர் தூரம் இழுத்து சென்று அருகில் இருந்த சதுப்பு நில கடலுக்குள் பாய்ந்தது. இதன்போது மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து வந்த குறித்த மனைவி தூக்கி வீசப்பட்டதுடன் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த கணவர் டிப்பர சில்லுக்குள் சிக்குண்டு உடல் சிதைவடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேலும் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட மனைவி மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் தகவல்கள் தெரிவித்துள்ளன. அத்துடன் குறித்த விபத்து சம்பவம் தொடர்பில் டிப்பர் வாகனத்தின் சாரதி ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை குறித்த விபத்தில் உயிரிழந்த நபருக்கும் படுகாயமடைந்த பெண்ணுக்கும் கடந்த ஜனவரி மாதம் 28ஆம் திகதி திருமணம் நடைபெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (செ-4,30)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

காக்கைதீவு சந்தைப் பகுதியில் வைத்து 1 கிலோ 840 கிராம் எடையுடைய கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன், கஞ்சா வைத்திருந்த நபரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழான புலனாய்வுப் பிரிவினருக்கு பொது மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த நபர் நேற்று மதியம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## இறுவெட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஈழத்து மெல்லிசைப் பாடகர் மா.சத்தியமூர்த்தியின் **சிறுநண்டு மணல் மீது** இறுவட்டு வெளியீட்டு விழா எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இராமநாதன் வீதி நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள ராஜா கிறீம் கவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாயன்மார்கட்டு தெய்வத் தமிழிசைக் கவிஞர் இராசையா குகதாசன் தலைமையில் இடம பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன். கௌரவ விருந்தினராக வலிகாமம் முன்னாள் ஆசிரிய ஆலோசகர் கலாபூஷணம் சங்கீத பூஷணம் வி.கே. நடராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ)

## தமிழீழ விடுதலைப்...

பிவித்துரு ஹெல உறுமய ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றைய தினம் கொழும்பில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில,

"கடந்த 2013ஆம் ஆண்டிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நாட்டில மீண்டும் தலைதூக்கும் என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரியாக அப்போது செயற்பட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நாலகடி சில்வா இரகசிய அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். இதனிடையே கடந்த மாதம் 13ஆம் திகதி கிளிநொச்சியில் வைத்து பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் முன்னாள் போராளிகள் மூவர் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் விடுதலைப் புலிகளை மீள எழச்செய்வதற்கான ஆயதப் போராட்டத்திற்கான ஆயத்தங்களை மேற்கொள்ள திட்டமிட்டிருந்தனர். மருதங்கேணி பிரதேசத்தில் பிரபல நபர் ஒருவரை கொலை செய்வதற்காக வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கிளைமோர் குண்டு ஒன்றையும் கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கைப்பற்றியிருந்தனர். அதுமட்டுமல்ல மேலும் பல வெடிபொருட்களும் மீட்கப்பட்டன. விடுதலைப் புலிகள் மீள எழுவார்கள் என்பதை நாங்கள் தொடர்ந்தும் கூறிவருகின்றோம். இப்போது புலனாய்வுப் பிரிவும் அதனையே தெரிவிக்கின்றது. அதனால் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனிடையே முதலமைச்சர் விக்னேஸ்வரன், வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றுமாறு வலியுறுத்திவந்தாலும் அங்கிருந்து படையினரை மீள அழைக்கக்கூடாது. சமஷ்டி தீர்வைக் கோரிவரும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கே விடுதலைப் புலிகளிடம் இருந்து மரண அச்சுறுத்தல் காணப்படுமாயின் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எவ்வளது உயிர் அச்சுறுத்தல் காணப்படும்? இந்த நிலையில் விடுதலைப் புலிகளினாலேயே மகிந்த ராஜபக்ஷவும் கொலை செய்யப்பட்டும் என்று பாதுகாப்பையும் அரசாங்கம் குறைத்துள்ளது. எனவே முன்னர் இருந்த அதிகளவான பாதுகாப்பை மகிந்த ராஜபக்ஷவுக்கு மீள வழங்கும் படி கோரிக்கை விடுக்கின்றேன் என்றார் உதய கம்மன்பில. (செ-11)

## பஸ்வண்டியுடன்...

விபத்துக்குள்ளாகி ஹன்ரர் அருகில் இருந்த கிணற்றுக்குள் பாய்ந்ததில் அதில் பயணித்த மூவர் படுகாயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுத் திங்கட்கிழமை மதியம் இடம்பெற்ற இவ்விபத்துத் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மண்டான் பகுதியில் இருந்து தொண்டைமானாறு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த பஸ்வண்டியும் வல்வெட்டித்துறையில் இருந்து யாழ் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த ஹன்ரர் வாகனமும் தொண்டைமானாற்றுச் சந்தியில் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதில் பஸ்வண்டியின் கண்ணாடிகள் உடைந்ததுடன் ஹன்ரர் வாகனம் வீதியின் மருங்கில் இருந்த இடத்தினைக் குறிப்பிடும் கல்லை உடைத்துக் கொண்டு வீதியைவிட்டு விலகி சென்று அருகில் இருந்த பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் முன் சக்கரங்கள் பாய்ந்து பலத்த சேதமடைந்து காணப்பட்டது.

இவ்விபத்தில் ஹன்ரரில் பயணித்த கொழும்பைச் சேர்ந்த எல்.எல்.பத்மசிறி (வயது56), பாணாந்துறையைச் சேர்ந்த முகமது பவாசூன் (வயது38), கல்முனையைச் சேர்ந்த சல்மீன் முகமது முகாப்டின் (வயது20) ஆகிய மூவரும் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-60)

## ரூ.20 இலட்சம்...

மேரிஸ் கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் கிறிஸ்துராசா தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை தமது தொழிலாளர்கள் வலைகளை கடலில் விட்டதாகவும் இரவு 9 மணியளவில் கட்டைக்காட்டை அண்டிய பகுதிகளில் வெளிச்சமின்றி வந்த இந்திய மீனவர்களின் ரோலர்கள் தமது வலைகளை அறுத்து விட்டுச் சென்ற சென்றதாகவும் அவர் கூறினார்.

அறுக்கப்பட்ட வலைகளின் மொத்தப் பெறுமதி 20 இலட்சம் ரூபாய் எனவும் இதனால் கடற்தொழிலினை வாழ்வாதார தொழிலாக கொண்டுள்ளதாம் பெரும் நஷ்ட நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர் இது தொடர்பில் உரிய அதிகாரிகளிடமும் முறையிட்டுள்ளதாகத் தெரிவித்தார். (செ-60)

## மோ.சைக்கிள்...

தாயொருவர சம்பவிடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதுடன், அவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ளனர். இந்நிலையில் அவர்கள் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஓமந்தை பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விபத்துச சம்பவம் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

பன்றிக்கெய்தகுளம் பாடசாலையில் கல்வி பயிலும் அயல் வீட்டுப் பிள்ளையையும் அந்தப் பிள்ளையின் தாயாரையும் மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு பெரியமடுவில் உள்ள தனது வீட்டுக்கு பயணித்த குடும்பப் பெண்ணை பெரியமடுவில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த பிக்கப் வாகனம் மோதியதில் சம்பவிடத்திலேயே பிரஸ்தாப குடும்பப் பெண் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் ஓமந்தை பெரியமடு பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான யோகேஸ்வரன் ஜெனனி (வயது 33) என்பவரே சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, உயிரிழந்த பெண்ணுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த அவருடைய அயல்வீடும் உறவினருமான 22 வயதுடைய குடும்பப் பெண்ணும் அவருடைய 08 வயது மகனும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்துக்கு சென்ற ஓமந்தைப் பொலிஸார் சடலத்தை மீட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளதுடன் விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (செ-15)

## ஆமை இறைச்சி...

லாமை இறைச்சி மற்றும் கடலாமை முட்டைகள் என்பவற்றை சட்டவிரோதமாக வைத்திருந்த 05 சந்தேக நபர்களை கடற்படையினர் கைது செய்து பூநகரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை நண்பகல் வேளை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 6.5 கிலோகிராம் கடலாமை இறைச்சி மற்றும் 2.5 கிலோகிராம் கடலாமை முட்டைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ளவர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப்பொருட்களுடன் சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளார்கள். (செ-15)

## சசிகலாவுக்கு...

தோழி சசிகலா உள்ளிட்ட நான்கு பேர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் ஒரு வாரத்தில் தீர்ப்பு வழங்கப்படலாம் என என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

1991 மற்றும் 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா பதவி வகித்த வேளையில் அவரது தோழி சசிகலா, அவரது உறவினர் இளவரசி, ஜெயலலிதாவின் முன்னாள் வளர்ப்பு மகன் சுதாகரன் ஆகியோர் வருமானத்தை மீறி சொத்துகளைக் குவித்ததாக அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் 18 ஆண்டுகளாக இடம்பெற்று வந்த இந்த வழக்கில் கடந்த 2014ஆம் ஆண்டு செப்டம்பர் 27 ஆம் திகதி சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி மைக்கேல் டி குன்ஹாவால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இத்தீர்ப்பில் ஜெயலலிதா உள்ளிட்ட நான்கு பேரும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இதன்படி, இந்த நால்வருக்கும் நான்காண்டு காலம் சிறைத் தண்டனையும், ஜெயலலிதாவுக்கு 100 கோடி ரூபாய் அபராதமும், ஏனைய மூவருக்கும் தலா 10 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

இதையடுத்து ஜெயலலிதா உள்ளிட்ட நால்வரும் சிறைக்கு அனுப்பப்பட்டதோடு, முதலமைச்சர் பதவியையும் ஜெயலலிதா இழந்திருந்தார்.

அதேவேளை, இத்தீர்ப்பை எதிர்த்து இவர்கள் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்தனர். இந்த வழக்கு தொடர்பில் 2015ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதி கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி குமாராசாமி வழங்கிய தீர்ப்பில் ஜெயலலிதா உள்ளிட்ட நால்வரும் விடுவிக்கப்பட்டனர்.

இதனை எதிர்த்து கர்நாடக அரசின் சார்பில் மேல் முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் தீர்ப்பு ஒத்திவைக்கப்படுவதாக 2016ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7ஆம் திகதி அறிவித்திருந்தது. இந்த வழக்கில் இருதரப்பு வாதங்கள் முடிந்துள்ள நிலையில் கடந்த மாதமே தீர்ப்பு வெளியாகும் என எதிர்ப்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், இவ்வழக்கின் தீர்ப்பு தொடர்பில் கர்நாடக அரசின் மூத்த வழக்கறிஞர் துஷ்யந்த் தாவே உச்சநீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்த போது, ஒரு வாரம் பொறுத்திருங்கள் என்று உச்சநீதிமன்ற நீதிபதி பினாகி சந்திர கோஷ் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கில் தொடர்புடைய ஜெயலலிதா காலமான நிலையில் அவரது தோழி சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோர் இந்தத் தீர்ப்பை எதிர்கொண்டுள்ளனர்.

தமிழகத்தின் ஆளும்கட்சியான அ.தி.மு.கவின் சட்டமன்றக் குழுவின் தலைவராக சசிகலா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவு செய்யப்பட்டு, அவர் முதலமைச்சராக பதவியேற்க இருக்கும் நிலையில், உச்சநீதிமன்றம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தமிழகத்தின் முதலமைச்சராக சசிகலா பதவி ஏற்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வரும் நிலையில், உச்சநீதிமன்றத்தின் இந்த அறிவிப்பு தமிழக அரசியல் வட்டாரத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (செ-11)


**ஆங்கில வகுப்பு**

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0767070069

(7863) **M.Suren**



**எனது பாணியில் 100 கவிதைகள் (ஆங்கிலம்)**

15.01.2017 இல் யாழ்.திறந்த பல்கலைக்கழக மண்டபத்தில் இராசரத்தினம் றெனோஜ் எழுதி வெளியிட்ட மேற்படி ஆங்கில கவிதை நூல் பூபாலசிங்கம் புத்தக சாலையில் (பஸ் நிலையம் முன்பாக) பெற்றுக் கொள்ளலாம். மாணவர்கள் உட்பட சகலரும் வாங்கிப் படித்து பயன்பெறலாம்.

(7851)

**தொடர்புகளுக்கு:-0778085656**



## பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

வலம்புரியின் பிரதேச செய்தியாளராகப் பணியாற்ற விரும்புகிறீர்களா? உங்கள் விருப்பத்தை நிறைவு செய்ய உங்கள் சுய விபரம் அடங்கிய விண்ணப்பத்தை பிரதம ஆசிரியர், வலம்புரி, இல.03, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

உங்கள் விண்ணப்பத்தில் முழுப்பெயர், பால், பிறந்ததிகதி, நிரந்தர முகவரி, தபால்முகவரி, தொலைபேசி இலக்கம், தொழில், தே.அ.அ.இல, திருமண நிலை, கல்வித்தகைமை, தங்களைக் கேட்டறியக்கூடிய இருவரின் பெயர், விலாசம் என்பவற்றுடன் எதிர்வரும் 15.02.2017 இற்கு முன்பாக தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்
வலம்புரி

## மரண அறிவித்தல்



### தவநாகேஸ்வரன் பிரதீபன்
### (பிரபா)

*வேலணை மேற்கு 6-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட தவநாகேஸ்வரன் பிரதீபன் (பிரபா) நேற்று (06.02.2017) திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.*

*அன்னார் தவநாகேஸ்வரன் - பஞ்சாட்சரதேவி (மலர்) தம்பதியரின் அன்பு மகனும், சரவணபவன் - யோகலட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகனும், நிரஞ்சனா (டயானா) அவர்களின் அன்பு கணவரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பலவி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

வேலணை மேற்கு,
6-ம் வட்டாரம். (C-7482)

தகவல் :
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.